
# உலகத்தமிழ்

இதழ் ககூஉ (192)

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்













5ஆம் ஆண்டு நினைவு

நாள் 07.08.2023







"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று தொடங்கித்
தமிழர்தம் வாழ்வியலை விவரிக்கும் புறநானூற்றுப் பாடல் நூற்றுத் தொண்ணூற்று இரண்டு;
யாது வந்து நேர்ந்தபோதும் இடையறாமல் வெளிவரும்
உலகத் தமிழிதழ் எண் நூற்றுத் தொண்ணூற்று இரண்டு

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 4 | கொள்கை விளக்கக் குறிப்பு |
| 5 | நூலேணி |
| 6 | தமிழெழுச்சி |
| 7 | மறைந்து போய்விட்டதா மனித நேயம்! |
| 8 | அவ்வப்போது |
| 9 | தேன்துளி |
| 10 | சேரமன்னர் வரலாறு |
| 11 | ஆங்கிலம் அரும்பிய அரசும்—வாழ்வும்! |
| 12 | தனித்தமிழ் மாட்சி |
| 13 | பொன்வண்டு |
| 14 | நற்றிணை—ஆங்கிலம் |

# உள்ளடக்கம்


15 எண்பதாண்டு வாழ்ந்திருந்தால்!

16 பதிகங்களைப் படியுங்கள்!

17 பஃறொடை வெண்பா!

18 வள்ளுவம்!

19 தமிழன்னை நான்மணிமாலை

20 தாய்ப்பால் ஆயுட்காலப் பரிசு!

22 Bharathan In Kamba Ramayanam

23 பூ மழை

27 எல்லாம் தமிழ்!

28 புகழ் வணக்கம்!

32 ஆட்சிமொழிச் சட்ட வாரம் நிகழ்வுகள்!



# கொள்கை விளக்கக் குறிப்பு

## தமிழ் வளர்ச்சி

## 2023 – 2024

9



## இயல்–1

## தமிழ் வளர்ச்சித் துறை

### 1.2.5. இலக்கியச் சங்கமம்

நாட்டுப்புறக்கலை விழாவான 'நம்ம ஊரு திருவிழா'வின் சென்னைச் சங்கமத்தின் ஓர் அங்கமாகத் தமிழ் இலக்கியச் சங்கமம் என்னும் நிகழ்ச்சி சென்னை அடையாறு, இராஜரத்தினம் அரங்கம், முத்தமிழ்ப் பேரவையில் 14.01.2023 முதல் 17.01.2023 வரை ரூபாய் 12,45,000/– செலவில் நடத்தப்பட்டது.

### 1.2.6.உலகத் தாய்மொழி நாள் விழா

ஐக்கிய நாட்டுக் கல்வி மற்றும் கலைப் பண்பாட்டு அவை, பிப்ரவரி திங்கள் 21–ஆம் நாளை உலகத் தாய்மொழி நாளாகக் கடைப்பிடிக்க அறிவித்தது. அதன்படி, தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் உலகத் தாய்மொழி நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில், 2022–2023–ஆம் நிதியாண்டில் 21.02.2023 அன்று சென்னையிலுள்ள நீதிபதி பஷீர் அஹ்மத் சயீத் மகளிர் கல்லூரியில் பட்டிமன்றம். பாட்டரங்கம், இளையோர் அரங்கம் ஆகியவை நடத்தப்பட்டன.

### 1.3.விருதுகள்

தமிழ்மொழியின் தொன்மை. பண்பாடு. நாகரிகம் ஆகியவற்றை அனைவரும் உணரும் வண்ணம் தமிழின் பெருமையைத் தளராது உயர்த்திப் பிடித்து வரும் தமிழறிஞர்களுக்கு விருதுகள் வழங்குவதைத் தூய தமிழ்த் தொண்டாகக் கருதி அரசு செயன்மையாற்றி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.03.2022–ஆம் நாளன்று தமிழ் வளர்ச்சித் துறை, உலகத்தமிழ்ச்சங்கம் மற்றும் செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம் ஆகியவற்றின் வாயிலாக ட 39 விருதுகள் வழங்கப்பட்டன. இவ்விருதுகளுக்குரிய விருதுத் தொகை ரூபாய் ஓர் இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தப்பெற்றது.

## Chapter 1

## Tamil Development Department

### 1.2.5 Literary Confluence

Tamil Literary confluence as a part of Chennai confluence (Chennai Sangamam) of folk art festival 'Namma Ooru Thiruvizha' was held from 14.01.2023 to 17.01.2023 at a cost of Rs.12,45,000/- at Rajarathinam Muthamil Peravai, Adyar, Chennai. Arangam,

### 1.2.6 World Mother Tongue Day Celebration

The United Nations Educational, Scientific and Cultural Organization has declared 21st February as World Mother Tongue Day. Accordingly, the World Mother Tongue Day is celebrated annually by the Tamil Development Department of the Government of Tamil Nadu.
Accordingly, Debate, Concert and Youth assembly were held at Justice Basheer Ahmed Syed Women's College, Chennai on 21.02.2023 in the financial year 2022-2023.

### 1.3. Awards


In order to make the people all over the realize the antiquity, culture and world civilization of the Tamil language and admire the pride of Tamil, the Government has been honouring the eminent scholars who render excelling services for the cause of Tamil, with due awards as a real tribute to Tamil language.Honourable Chief Minister of Tamil Nadu enhanced the prize amount from Rs.1 lakh to Rs.2 lakh on 14.03.2022 for the 39 awards given through Department of Tamil Development, World Tamil Sangam and Directorate of Tamil Etymological Dictionary Project.

*வளரும் . . . .*

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

நெல்லை மாவட்ட
நாட்டுப்புற
தெய்வங்கள்
துளசி. இராமசாமி

நூலின் பெயர் : நெல்லை மாவட்ட நாட்டுப்புற தெய்வங்கள்
நூலாசிரியர் : துளசி. இராமசாமி
பதிப்பாண்டு : 1985
விலை : ரூபாய் /-
பக்கங்கள் :
வெளியீட்டு எண்: 109




நூலின் பெயர் : Heritage of The Tamils–Temple Arts
நூலாசிரியர் : S.V. Subramanian, G. Rajendran (ed)
பதிப்பாண்டு : 1985
விலை : ரூபாய் 50 /-
பக்கங்கள் : 629
வெளியீட்டு எண் : 110




நூலின் பெயர் : மொழிபெயர்ப்பியல்
நூலாசிரியர் : சு. சண்முக வேலாயுதம்
பதிப்பாண்டு : 1985
விலை : ரூபாய் 10/-
பக்கங்கள் : 140
வெளியீட்டு எண் : 111




நூலின் பெயர் : தமிழர் திருமணம்
நூலாசிரியர் : டாக்டர் சசிவல்லி
பதிப்பாண்டு : 1985
விலை : ரூபாய் 25/-
பக்கங்கள் : 359
வெளியீட்டு எண்: 112

வேளை எனைத்தனியே விட்டகல்வீர் என்றுரைத்தேன்.

நண்பரெல்லாஞ் சென்றுவிட்டார்; நைந்துநின்ற தாயார்தாம்

உண்பதற்குப் பண்டம் உதவிநல்ல பால்கொணர்ந்தார்,

சற்று விடாய்தீர்ந்து தனியே படுத்திருந்தேன்;

முற்றும் மறந்து முழுத்துயிலில் ஆழ்ந்து விட்டேன். ...





குப்பன் நடுநடுங்கிக் கொஞ்சுமிள வஞ்சியிடம்

மங்கையே ராமனருள் வாய்ந்தவனாம் வானமட்டும்

அங்கம் வளர்வானாம் அப்படிப் பட்டவனை

இந்தச்சஞ் சீவிமலை தன்னை யெடுத்துவர

அந்த மனிதனங்கே ஆணை இடுகின்றான்

# மறைந்து போய்விட்டதா மனித நேயம்!

"பாடல்கள் பதுங்கி மறைந்து பரவக்கூடியவை; அதற்கு நாடுகளைப் பிரிக்கும் எல்லைகள் இல்லை. சிறைகளிலும் விரைவில் வேகமாய்ப் படர்ந்து வளரும்; கடின உறைகளையும் ஊடுருவிடும்; மிகச் சரியான கவிதை, சரியான தருணத்தில் சகாப்தங்களைச் சரித்து, சரித்திரங்களை மாற்றிவிடும்" இவ்வாறு வரும் பீட்சீஜர் என்ற அமெரிக்கப் பாடகரின் அழகிய வரிகள். மனித நேயத்தையும் நவீன கலைகளையும், பழைய நியாயதருமம், அறம் என்ற பெயரில், மிகச் சிறந்த அன்றைய எழுத்தாளர்கள் தத்துவஞானிகளின் கருத்துகள் வெளிக்கொணராமல் மறைக்கப்படுகின்றன. மனிதநேயம் பற்றியும் அன்பு, இரக்கம் பற்றியும் பேசுவதைத் திரித்து இன, மத, நிற பேதங்கள் முன்னிறுத்தி நடத்தப்படும் அரசியல், சமூக வெறுப்புகள் மலிந்து வருவதை இன்று நாம் அதிகம் காண்கிறோம். உண்மையான சுதந்திரம், தனிமனித விடுதலை பற்றிய கருத்துகள் விவாதப் பொருள்களாகி வருகின்றன. அறியாமை, பகைமை மற்றும் இனவுணர்வு இவைகளை எதிர்க்க வேண்டிய புதிய கருத்துக்கள் புத்துயிர் பெறவேண்டும். மனிதனை மனிதன் அவமதிக்கும் மூர்க்கத்தனமும் வன்முறைகளும் வளரவிடாமல் அடியோடு வேரறுக்க வேண்டிய தருணம் வந்துள்ளது. கலை இலக்கியங்கள் கல்வி தரும் கண்கள். இவைகள் மக்களின் மனதில் பரந்த எண்ணத்தையும் பண்பான ஒழுக்கத்தையும் தருவதால் பழங்குடியினரிடையேயும் பொருந்தாப் பழைமையைக் கைவிட்டு மனிதர்களிடம் அன்புடன் பழகுவதை அறிவுறுத்தி, வளர்ப்பதற்கு உதவுபவை என சரித்திரம் கூறுகிறது. கலைநயமும் அழகுணர்வும் கற்றுத் தருவதால் புதிய சண்டை சச்சரவற்ற சமுதாயம் வளரமுடியும் என்ற நம்பிக்கையையும் கனவினையும் கடந்த கால நிகழ்ச்சிகளின் சோகங்கள் நமக்குக் கற்றுத் தருபவை. வேக்ளக் ஹாவல் என்ற செகோசுலோவிய நாட்டு நாடக ஆசிரியர், "எந்த உலகில் மனசாட்சி பிறழ்ந்த பொருளாதாரம், அநியாயக் கொள்ளை மற்றும் காட்டுமிராண்டித் தனமான சுரண்டல் மூலம் வாழ்க்கைநிலை பாதிக்கப்படுகிறதோ, அந்த உலகின் மக்கள் தான் அதற்குப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனச் சுட்டிக்காட்டினார். ஜான்ஸ்டெய்ன்பெக் என்ற எழுத்தாளர், "தன் 'சீற்றங்களின் கொத்து" என்ற நாவலில், தாயிடம் சமூக உணர்வுள்ள மகன் கூறுகிறான். "எங்கு ஒரு தனிமனிதன், காவலர்களால் தாக்கப்படுகிறானோ!, எங்கு ஒரு மனிதன் கூட்டத்தில் சிக்கி அடிபடுகிறானோ, அம்மா! நான் அங்கு இருப்பேன்!" என சப்தமிடுவது போல் எழுதியிருப்பார். அமெரிக்காவில் காவல்துறையைச் சேர்ந்தவனால் கழுத்து நெறிக்கப்பட்ட ஜார்ஜ்ஃப்ளாய்டு, எழுப்பிய மூச்சுத்திணறிய குரல், நம் தலைநகரில் தெருக்களில் உருண்டு கதறிய விவசாயிகளின் குரல், மலைப்புறப் பழங்குடியினருக்கு எல்லைப் பகுதிகளில் நேர்ந்த கொடுமைக்கு உள்ளானவர்களின் அழுகைக்குரல் நமக்கெல்லாம் கேட்கும், கேட்கவேண்டும் என திரு.ஷெல்லி வாலயா தன் கட்டுரையில் குறித்துள்ளார். "உலகில் அன்பு, அறம், மனிதநேயம் போதிக்கும் கலை, இலக்கிய உலகிற்கும் நடைமுறையில் காணும் வன்முறை, கொடுமை பேரழிவிற்கும் ஒரு சமநிலையற்ற சூழ்நிலையே இன்று காணமுடிகிறது". பீட்டர் வெய்சு அவர்களின் "போராட்டத்தின் அழகுணர்வு" என்ற நாவலில் அரசியல் எதிர்ப்பிற்கும், விடுதலை உணர்வு பெற்ற சுதந்திரமான கலையுணர்வு மாந்தர்களுக்கும் ஏதோ தொடர்பு இருக்கவேண்டும் என்பதைத் தன் கதையின் கருவாகக் காட்டியிருப்பார். சுதந்திரமான அறிவியல் கலையுணர்வு மக்களிடையே வளர்ந்திருந்தால் இரண்டாம் உலகப் போரின் இன்னல்களை இந்த அகிலம் அனுபவித்திருக்காது என்றும் எழுதியிருப்பார். "இளைஞன், கலைஞன், மனிதன்" என்ற ஜேம்ஸ் ஜாய்ஸ் நாவலில் "நான், எனது எனக்கூறிக் கொண்டு, இனம், மொழி, மதம் பெயரில் மனிதர்கள் அழிக்கப்படும் இடத்தில் என் கலைப் படைப்பை சமர்ப்பித்திடமாட்டேன்; எங்கு என்னை என் மனிதத்தை மதிக்கிறார்களோ அங்கு என் கலைப் படைப்பு உணர்த்தப்படும்" என மனிதநேயம் வளர, கலையுணர்வும் ஆன்மீகநெறியும் அறத்தின் ஆளுமையும் வளரவேண்டும் என உலகிற்கு உணர்த்தியிருப்பார். எங்கு கலை, இலக்கியம், இசை, ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைகளின் சரித்திரமும் மேன்மையும் தாக்கங்களை ஏற்படுத்தவில்லையோ, அங்கெல்லாம் கலகங்களும் கலவரங்களும் அராஜகங்களும் அரக்கத்தனமான கொடுமைகளும் தலைவிரித்தாடும். பெண்மையும் மென்மையும் தாய்மையும் புனிதமும் புண்ணியமும் புண்படுத்தப்பட்டு வன்முறைகள் சூறாவளியாய் அழிவை ஏற்படுத்துகின்றன. கலாச்சாரம், தத்துவம் மற்றும் கலை மட்டும்தான் ஒரு உயர்வான முன்னேறிய சமூகத்தை உருவாக்க முடியும் என்கிறார் மார்த்தா நுஸ்பாம் என்ற அமெரிக்கத் தத்துவப் பல்கலைகழகப் பேராசிரியை. மக்கள் மனதில் கலை, கல்வியுணர்வை மறைத்து, அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் உணரவைத்த பின்தான் ஹிட்லரால் இனப்படுகொலை செய்ய முடிந்தது.



கலையுணர்வையும் பதவி மோக எதிர்ப்பையும் பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பாடங்களாக்கப்பட்டு கோதேயின் நண்பர் ஃபிரெடரிக் ஷில்லரின் கல்விமுறைக் கொண்டு புதிய ஜெர்மனி உருவாக்கப்பட்டது. நமது நாட்டின் சாந்தி நிகேதன், சபர்மதி போன்றவை புத்துயிர் பெறவேண்டும். கலையார்வம், கட்டுகளையும் தளைகளையும் உடைத்தெறிந்து, மத, இன, மொழி வேறுபாடுகளை களைந்தெறிய உதவுவதைக் காணலாம். அன்பு, கனிவு, இரக்கம், சகமனிதஉறவு சேர்ந்ததுதான் மனிதநேயம். அதனை இழந்துவிட்ட அரசியலை எதிர்கால சந்ததியருக்கு நாம் விட்டுச் சென்றுவிடக் கூடாது. (நன்றி இந்து சூலை 31, 2023 நாளிதழ் கட்டுரை)



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா
ஆட்சிமொழிக் கருத்தரங்கம்

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தில் 12.07.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு ஆட்சிமொழிக் கருத்தரங்கினை தொடங்கி வைத்து ஆற்றிய உரையின் இரண்டாம் பகுதி . .



நம் தமிழ், வெறும் காட்சிமொழியாக மட்டுமல்லாமல், ஓர் ஆட்சிமொழியாகவும் இருக்கவேண்டும் என்பது கலைஞர் கண்ட கனவு.

முத்தமிழறிஞர் கலைஞரின் அந்தக் கனவை நனவாக்கும் முயற்சியில் கலைஞர் நூற்றாண்டில் களமிறங்கி இருக்கிறது இந்த தமிழ் வளர்ச்சித் துறை.

ஓங்காப்புகழ் தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாட்டில் தமிழே ஆட்சிமொழியாகத் திகழ்ந்தது என்பதற்கு தொல்காப்பியத்துள் எடுத்தாண்டுள்ள சொற்களே இன்றும் சான்றுகளாக நிற்கின்றன. அவை அவையம் ஆக்கம். ஆசிரியர். ஆராய்ச்சி ஆற்றல், தூளங்கல், உத்தி, ஊர்தி, காவலர், கொடை, கோட்டம், சார்பு, சிறை, சீர்மை, செய்தி, தகுதி, தெரிவு, தொழில், பாசறை, பொருண்மை, மரபு, மாண்பு, மொழிபெயர்ப்பு, வலியுறுத்தல், வேண்டுதல், முனைவர், முதல்வர் என்பன போன்ற பல சொற்களை தொல்காப்பியர் எடுத்தாண்டுள்ளதைக் கூர்ந்து நோக்கின் இவற்றுள் மேற்குறித்த சொற்கள் இன்றும் ஆட்சிச் சொல்லுக்குரிய தகுதியோடு பயன்பாட்டில் இருப்பதை அறியலாம்.

சங்கத் தனிப் பாடல்களின் தொகை 2381 என்பர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்கத் தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்ட சில சொற்கள் இன்றும் எவ்விதப் பொருள் மாற்றமுமின்றி அன்றாட வாழ்விலும், ஆட்சியிலும் பயன்படுத்தப்பட்டுவரும் சிறப்பைக் காணும் பொழுது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், உயர்தனிச் செம்மொழியாக ஏற்றம் தந்த சிறப்பினைக் கண்டு இன்று நாம் அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்திருக்கிறோம்.

சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்ட சொற்களான அடகு அண்ணல், அயலார். அரங்கு, அரசியல், ஆவணம். கட்டளை கழகம், கூலி. சான்று சிறுதொழில் சீருடை தகைமை, நிதி. நுகர்வோர் பேரணி மண்டாம் மாட்சி வழங்குநர் என்பன போன்ற சொற்கள் இன்றும் ஆட்சிச் சொற்களாக வழங்கி வருவதை எண்ணும் பொழுது தமிழ்மொழியின் தொன்மைக்கு இவற்றைவிடப் பெருமிதம் என்னவென்று சொல்வது.

27.12.1956–ல் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, 1957–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 23–ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பெற்று. தமிழ்நாட்டில் தமிழ் மட்டுமே ஆட்சிமொழியாகும் என்ற சட்டம் நிறைவேறிய பிறகு 1957–ல் ஆட்சிமொழிக் குழுவை அரசு ஏற்படுத்தியது. இக்குழு தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து தமிழில் அலுவல்களை நடத்த அறிவுரைகளை வழங்கியது.

நூற்றாண்டு நாயகர் எங்களையெல்லாம் வழிநடத்தி வாழ்வித்த பெருமகனார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நல்லாட்சியில் 28.05.1971 அன்று வெளியிடப்பட்ட அரசாணையின்படி தமிழ் வளர்ச்சி இயக்ககம் என்ற புதிய தனித் துறைத் தலைமை அலுவலகமாகத் தோற்றுவிக்கப்பட்டது. அத்துறையிடம் ஆட்சிமொழிக் குழுவின் பணிகள் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டன.

*தொடரும் . . . . .*





## தேன்துளி — 1




அறிஞர் ஆல்பர்ட் காமு வரிகளில் சொல்வது என்றால்:

எனக்கு முன்னால் செல்லாதே;

நான் உன்னை பின் தொடர்பவனாக இருந்து விடச்செய்யாதே!

எனக்கு பின்னால் வராதே;

என்னை தலைவனாக்கி விடாதே!

நாமிருவரும் நண்பர்களாக இருப்போம்;

தோளோடு தோள் தொட்டபடியே நடப்போம்!

Dont walk in front of me, I may not follow.

Dont walk behind me, I may not lead.

Walk beside me and be my friend.

## தேன்துளி — 2



நம் தலைவர் அன்றே சொன்னார்,

நம் கட்சி ஆட்சியில் கடல் நீர் இனிக்கும் என்று

கடல் நீரை அள்ளிக் குடித்தோம்

அமுதம் என்று ஆர்பரித்துக் கொண்டோம்

தலைவர் கொள்கை வாழ்க என்று முழங்கினோம்.

கொள்கைக்காக விரலை வெட்டிக்கொண்டாலும் வலிக்காது

என்றார்கள்; கொள்கைக்காக வெட்டிக்கொண்டோம். வலித்தது,

முடிவு மரணம், நமக்கும், கட்சிக்கும், கொள்கைக்கும்

போலந்து நாட்டுக் கவிஞன் ஆதாம் வாஷ்மின்



# சேரமன்னர் வரலாறு !

உரைவேந்தர் ஔவை துரைசாமி



இத்தகைய சொற்களால் குட்டுவன் மனத்தே மாறுதலொன்று உண்டாயிற்று. போர் நிகழாமல் தடுத்து, நாட்டு மக்களது வாழ்வு அமைதியோடு இயலுமாறு செய்வதில் அவன் கருத்துடையனானான். அக்காலத்தே இப்போது திருவாங்கூர் நாட்டில் உள்ள கோட்டயம் பகுதியில் வாழ்ந்த வேந்தர் சிலர் பகைத்துப் போர் தொடுத்தனர். வேந்தனுடைய தானைத் தலைவர் போர்க்குப் புறப்பட்டனர். இச் செய்தி குட்டுவனுடைய படைப்பெருமையைக் கண்டு தங்கள் நாடு எய்த விருக்கும் அழிவையும் நினைந்து வருந்தினர். அப் பகுதியில் வாழ்ந்த முதியருட் சிலர் குட்டநாட்டுப் பாலையூரினரான கோதமனாரைக் கண்டு போரை விலக்குதற்கு ஏற்ற முயற்சி செய்யுமாறு வேண்டினர்.



கோதமனார் குட்டுவனைக் கண்டு, "வேந்தே, நினது பெரும்படை சென்று பரவுதற்கு முன் இந்த நாடு) இருந்த சிறப்பைச் சொல்வேன், கேள்; வளையணிந்த இளமகளிர் வயலில் விளைந்திருக்கும். நெற்கதிரைப் பிசைந்து நெல்மணிகளைக் கொண்டு அவல் இடிப்பர்; பின்பு, அவலிடத்த உலக்கையை அருகே நிற்கும் வாழைமரத்தில் சார்த்திவிட்டு வயல்களில் மலர்ந்திருக்கும் வள்ளைப் பூக்களைக் கொய்து விலையாடுவர்; வயல்களில் மீனினங்களை மேய்ந்துண்ணும் நாரை முதலிய குருகுகளும், வயல் வரம்பில் தங்கியிருக்கும் ஏனைப் புள்ளினங்களும் நீங்குமாறு அம்மகளிர் அவற்றை ஒப்புவர்; இசைச்சுவை நல்கும் இசைவாணர், ஊர் மன்றத்தில் தங்கியிருந்து, மனைதோறும் போந்து யாழை இசைத்து இனிய பாட்டுகளைப் பாடி இன்புறுத்துவர். இத்தகைய வளஞ்சிறந்த நாடு இனி இரங்கத்தக்க அழிவெய்தும் போலும்" என்று பாடினர்.

இத்துணை வளஞ் சிறந்த நாடு கெடுவது கூடாது என்ற கருத்துக் குட்டுவனுக்கும் தோன்றிற்று. நாட்டிற்குக் கேடு உண்டாகாத வகையில் போரை நடத்துமாறு தானைத் தலைவரைக் குட்டுவன் பணித்தான். கடல் போற் பெருகி வந்த படைத்திரளைக் கண்ட மாத்திரையே, பகை மன்னர் மனவலியழிந்து அடிபணிந்து அவன் ஆணைவழி நிற்கலுற்றனர். நாட்டு மக்கள் குட்டுவனை வாயார வாழ்த்தினர். நாட்டினில் நல்லரசு நிலவத் தொடங்கிற்று.

கோதமனார் உரைத்தவற்றால் குட்டுவன் மனம் மாறி அறமே நினைந்தொழுகும் அருள் வேந்த னாயினன். நெடும்பாரதாயனார் முதலிய சான்றோரைக் கொண்டு வேள்விகள் பல செய்தான். அறம் முதலிய உறுதிப் பொருள்களை எடுத்துரைக்கும் நூல்களைச் சான்றோர் விரித்துரைக்கக் கேட்டு இன்புற்றான்.

எவ்வுயிர்க்கும் தீங்கு நினையாத கொள்கையும, சீர்சான்ற வாய்மையுரையும் அவன்பால் சிறந்து விளங்கின. சொல்லாராய்ச்சி, பொருளாராய்ச்சி, சோதிட நூல் ஆராய்ச்சி வேதாமங்களைக் கேட்டல் முதலிய நெறிகளில் குட்டுவன் கருத்துப் பெரிதும் ஈடுபடுவதாயிற்று.

அன்பே நினைந்து ஒழுகும் முனிவர் உறவும், அறமே செய்தொழுகும் அந்தணர் கூட்டமும், வேள்வி வாயிலாகத் தேவரை இன்புறுத்தும் வேதியர் சுற்றமும் குட்டுவனைச் சூழ்ந்து நின்றன. அவனும் இம் முனிவர் முதலிய சான்றோர்களின் சிறந்த துணையை நயந்து வேள்விகள் பல செய்யலுற்றான். வேள்வித் தீயில் நெய் பெய்து எழுப்பும் ஆவுதிப் புகை அவனுக்கு மிக்க இன்பத்தைச் செய்தது. ஒருபால், தன்னை நாடி வருவோர்க்கு வரைவின்றிப் பெருஞ்சோறு வழங்கி விருந்தோம்புமாறு ஏற்பாடு செய்தான். வேள்வியில் எழும் ஆவுதிப் புகையும், விருந்தோம்புங்கால் சோற்றிடைப் பெய்யும் நெய்ப்புகையும், நறுமணங்கமழ விண்படர்ந்து வானுலகத்துத் தேவரை இன்புறுத்தின. அதனால், குட்டுவனது வாழ்க்கை வானுலகத்துத் தேவர் விரும்பும் சிறப்பு மிகுவதாயிற்று.

குட்டுவன்பால் நாடோறும் பரிசிலர் போந்து அவன் புகழைப் பாடினர்; அவர்கட்குப் பகைவர் நல்கிய நன்கலங்களை வழங்கி அவர்கள் உண்டு தெவிட்டு மளவும் கள்ளும் தேறலும் தந்து களிப்பித்தான்.

*வளரும் . . . .*



# ஆங்கிலம் அரும்பிய அரசும் – வாழ்வும்... !

வழக்கியல் வல்லுநர் செந்தமிழ்த்திலகம் திரு. செல்லத்தம்பி
சிறீக்கந்தராசா, இலண்டன் மாநகரம்

129

ஆங்கில மொழியின் எழுத்துக்கூட்டல் மட்டுமன்று, அதன் உச்சரிப்பும் தாறுமாறானதாகவும் தர்க்கரீதிஅற்றதாகவும் இருப்பதாக Lord Cromer என்ற ஆங்கில எழுத்தாளர் கூறி யிருக்கிறார். தம்முடைய கருத்தை அவர் ஒரு கவிதை வடிவில் எழுதியிருக்கிறார். அந்தக் கவிதையைக் கீழே காண்க :–

When the English tongue we speak
Why is break not rhymed with weak ?
Won't you tell me why it's true
We say sew, but also few?
And the maker of a verse

Cannot rhyme his horse with worse?
Beard is not the same as heard,
Cord is different from word,
Cow is cow, low is low,
Shoe is never rhymed with foe.
Think of hose and dose and lose,

And think of goose and yet of choose, Think of comb and tomb and bomb, Doll and roll and home and some. And since pay is rhymed with say, Why not paid with said I pray ? Think of blood and food and good; Mould is not pronounced like could. Why is done, but gone and lone – Is there any reason known ? To sum it up, it seems to me , That sounds and letters don't agree.

## எந்திரத் தொழிற்றுறை வளர்த்த ஆங்கிலம்
## The language developed by the Industry

பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் பிரித்தானியாவில் ஏற்பட்ட எந்திரத் தொழிற்றுறைப் புரட்சி ( Industrial Revolution ) விஞ்ஞானத் துறையையும் தொழில் நுட்பத் துறையையும் முன்னேறச் செய்தது. விஞ்ஞான நுட்பங்களையும் தொழினுட்பக் கண்டுபிடிப்புகளையும் சுட்டுவதற்கும் குறிப்பதற்கும் சொற்கள் தேவைப்பட்டன. விஞ்ஞானிகளும் தொழில் நுட்பர்களும் மொழியறிஞர்கள் அல்லர். அவர்களுக்கு மொழித் துறையில் அக்கறையும் இல்லை. ஆகவே அவர்கள் தமக்குத் தோன்றியவாறு சொற்களைப் படைத்தார்கள். விஞ்ஞான விந்தைகளால் கவரப்பட்ட மக்கள் விஞ்ஞானிகளைப் போற்றினார்கள், ஏத்தினார்கள். அவர்களின் புதியன படைக்கும் ஆற்றலை ( Invention and inventiveness ) வியந்தார்கள். அவர்களின் விளக்கங்களை ஏற்றார்கள். அவர்கள் படைத்த புதுப்புதுச் சொற்களையும் ஏற்றார்கள். அந்தப் புதுச் சொற்கள் செல்வாக்குப் பெற்றுப் புழக்கத்துக்கு வந்தன.

அப்படியிருந்தும், விஞ்ஞானிகள் படைத்த சொற்களை ஏற்றுப் போற்றச் சில மொழியறிஞர்கள் தயங்கினார்கள். அவ்வாறு தயங்கியவர்களில் Dr. Samuel Johnson அவர்களும் ஒருவர். அவருடைய காலத்திலே தான், தொழிற்றுறை பெருவளர்ச்சி காணத்தொடங்கியது. இருப்பினும் விஞ்ஞான வயலில் விளைந்த Dr. Samuel Johnson மறுத்தார் என்று தெரிகிறது. ஆங்கில அகராதியின் சொற்பயிர்களைத் தமது அகராதிக் களஞ்சியத்தில் சேர்ப்பதற்கு பிதாமகரான அவர் தம்முடைய அகராதிக்கான முன்னுரையில் பின்வருமாறு எழுதியிருக்கிறார் :–

I could not visit caverns to learn the miner's lan–guage nor take a voyage to perfect my skill in the dialect of navigation, nor visit the warehouse of mer–chants, and shops of artificers to gain the names of wares, tools and operations, of which no mention is found in books.

ஆனால், அகராதிக்காரரின் அபிப்பிராயங்கள் பற்றி, விஞ்ஞான முன்னெடுப்புக்களை மேற்கொண்டவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் புதிய சொற்கள் என்ற நவ நவீன சொற்கள் ( Neologisms ) ஆங்கில மொழியை ஆக்கிரமித்தன. புதியன படைப்போர் ( Inventors ) தொழிற்றுறை முயலுநர் ( Entrepreneurs ) ஆகியோரின் ஊடாகவும், நூல் எழுதும் விஞ்ஞானிகள் மூலமும் புதுப்புதுச் சொற்கள் படைக்கப்பட்டன. வல்லான் வகுத்தது வாய்க்கால் என்றபடி, புதுச் சொற்கள் ஆட்சி பெற்றன. அவை அகராதிக் களஞ்சியங்களுக்குள் அத்து மீறி நுழைந்து அரியாசனம் ஏறின. நெசவுத் தொழிற்றுறை முன்னேறியபோது, அந்தத்துறைக்கே உரிய சொற்கள் பல பிறந்தன.

Carding, Spinning, Doffing, Fulling என்ற சொற்கள் இயல்பாகவே உருவெடுத்தன. பஞ்சினைத் துணியாக மாற்றும் போது நிகழ்கின்ற வெவ்வேறு கட்டங்களுக்கு உரிய சொற்கள் அவை. அவ்வாறே Jenny, Gin, Waterframe, Mule ஆகிய சொற்களும் பிறப்பெடுத்தன.

*வளரும் . . . .*



# தனித்தமிழ் மாட்சி

31

மறைமலையடிகள்

## 6.கல்வியே அழியாச் செல்வம் . . .

இனி, அறிவு நூற்கல்வியைப் பெற்றவர் மறுமையில் இன்பத்தை அடைவரென்று பலருங் கூறுக் காண்கின்றோமேயல்லாமல், இம்மையில் மற்றவர்க்கில்லாத சிறப்பினைப் பெறக் காண்கின்றோம் இல்லையே; எல்லாரும் உண்டு உடுத்து உறங்கிச் சாதல்போலவே அவரும் உண்டுடுத் துறங்கிச் சாகின்றனர்;

இன்னும் நன்றாக ஆராய்ந்து பார்க்குங்கால் உலகநூற் கல்வியில் மிக்கவர்களே இம்மையில் எல்லாச் சீருஞ் சிறப்பும் இன்பமும் பெறுகின்றனர் கட்புலனுக்கும் நமது நினைவுக்கும் எட்டாத மறுமையில் இன்பத்தை அடையலாமென நினைந்து அறிவுநூற் கல்வியிற் காலத்தைக் கழிப்பவர் கடைசியில் ஏமாறி இறப்பதற்கே இடமாகிறதென்று அதனை இழித்துக் கூறுவாரே பலர். என்றாலும், அறிவின் ஏற்றத்தாழ்வுகைளச் செவ்வையாக ஆராய்ந்துபார்த்தால், அறிவுநூற் கல்வியால் வருஞ் சிறப்பும் இன்பமும் வேறெதனாலும் வரமாட்டா என்பது நன்கு புலப்படும்.

எங்ஙனமென்றால், உலகத்தின்கண் எத்தகைய அரும்பெருந் தொழில்கள் நடைபெறுதற்கும் அறிவும் அறிவுமுயற்சியுங் கட்டாயமாய் வேண்டியிருக்கின்றன. அறிவில்லாமல் எந்தத் தொழிலையுஞ் செய்தல் முடியாது. எந்த நலத்தையும் அடைதல் இயலாது. அறிவில்லாதவர்களும் அறிவுடையாரைக்கண்டால் அவர்க்குச் சிறப்புச் செய்த பணிகின்றனர். அவரை விரும்புகின்றார்.

ஒருவர் பலருதவி கொண்டு ஓர் அரிய பெரிய முயற்சியை நடைபெறுவக்குங்கால், அம்முயற்சி அறிவில்லாதவர் செய்கையால் முட்டுப்படுதல் கண்டு எவ்வளவு வருந்தி அவரை வெறுக்கின்றனர் ! அப்போது அறிவுடையான் ஒருவன மற்றையோர் செய்த பிழைகளை யெல்லாந் திருத்தி அதனைச் செவ்விதாக்கி முடிக்குங்கால் அதனைக்கண்டு வியந்து அவன்மேல் எவ்வளவு உவப்படைந்த அவனை விரும்புகின்றனர்.இத்தனையே மிகச் சிறியடியற்தி முதல் மிகப்பெரிய முயற்சி ஈறாக அறிவில்லாதவர் செய்வன பெரிதும் பிழைபட்டுத் துன்பத்தைத் தருதலும், அறிவுடையார் செய்வன பெரிதுந் திருந்துமுற்று இன்பத்தைத் தருதலுஞ் சிறிதேனும் ஆழ்ந்து நினைப்பார்க்கு விளங்காமற் போகா.

இதுபற்றியன்றோ தெய்வப்பலமைத் திருவள்ளுவ நாயனார் 'அறிவுடையார் எல்லாம் உடையர் அறிவிலார் என்உடைய ரேனும் இலர்".என்று அருளிச் செய்தனர்.இளி, இத்துணைச் சிறந்த அறிவங் கல்வியாலன்றி உண்டாகாது. கல்வியில்லதாரிலும் அறிவால் முற்பிறவிகளிற் பயின்ற கல்வியின் பயனாலேயே அங்ஙனம் அறிவு கூடப் பெறுகின்றனர்.

அங்ஙனக் கூடப்பெற்ற அறிவும் இப்பிறவியில் மேலுமேலுங் கல்வியாற் பணப்டுத்தப் பட்டாலன்றி, அது பாசி மூடிய பளிக்குமணிபோல் திரும்பவும் அறியாமையால் அகப்பட்டு கல்வியில்லாதவன் எவ்வளவு உயர்ந்த அறிவு கூறினாலும், அதனை அறிவால் நிறைந்தோர் ஏற்றுக் கொள்ளமாட்டார். இது,

"கல்லாதான் ஒட்பங் கழியநான் றாயினுங்

கொள்ளார் அறிவுடை யார்"

என்று திருக்குறளுங் கூறுகின்றது.

*வளரும் . . . .*

அப்பொழுது அவனும் குறுக்கிட்டு, என் நாடியைச் சோதித்துப் பார் என்றான். நான் அவன் நாடியைப் பிடித்துப் பார்த்தேன். உண்மையை மறைத்துக் கூறலாமா? சுரத்தின் அறிகுறி ஒன்றுகூட அதில் காணப்படவில்லை. ஆகையால் அது கிடக்கட்டும், ஒருவனுக்கு ஜுரமே இல்லாமல் இருக்கலாம். ஆனாலும் உடம்பு சௌக்யமில்லாமல் இருக்கலாம். அல்லவா ? இந்தத் தடவை மட்டும் நான் சொல்வதைக் கேள். முதலில் போய் படுத்துக்கொள் அடுத்தபடி ..




நீ நினைப்பது சரியில்லை, என்று அவன் மறுபடியும் குறுக்கிட்டான். என் மனத்தில் குடிகொண்டு என்னை வாட்டும் இந்த நினைவுகளின் இடையில் என் உடல்நிலை எவ்வளவு நலமாய் இருக்கக்கூடுமோ அவ்வளவு நலமாய் இருக்கிறது என்று உறுதி சொல்லுகிறேன். எனக்கு நல்லது செய்ய வேண்டும் என்று நீ எண்ணினால், என் மனத்தில் உள்ள பரபரப்பு என்னை விட்டு நீங்க நீ உதவி செய்யவேண்டும்.

அதற்கு என்ன வழி ? வழி மிகவும் எளிது. தீவுக்கு அடுத்துள்ள மலைக்காட்டுக்கு ஜுபிடரும் நானுமாக ஒரு காரியமாகப் போக வேண்டியிருக்கிறது. எங்களுக்கு நம்பிக்கையான ஆள் – ஒரே ஒரு ஆள் – துணைக்கு வேண்டும். அப்படி நாங்கள் நம்பக் கூடியவன் நீ ஒருவன்தான். நாங்கள் நினைத்துப்போகும் காரியம் பழமாய் முடிந்தாலும் சரி, காயாய் முடிந்தாலும் சரி, அந்தக் காரியம் தீர்ந்தவுடன் இப்பொழுது என்னிடத்தில் நீ காணும் கிளர்ச்சிகள் எல்லாம் ஒடுங்கிவிடும். எனக்கும் அமைதி ஏற்பட்டுவிடும். இது நிச்சயம் என்றான்.

நீ என்ன சொன்னாலும் அப்படியே நடக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன். உனக்கு நல்லது செய்வதே என் முயற்சி. இந்த இழவு கொடுத்து வண்டுக்கும் நீ தொடங்கும் மலைப் பிரயாணத்துக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா ? என்றான்.

ஒன்றல்ல, இரண்டு சம்பந்தம் உண்டு. இது அபத்தம், லெகிராந்து, இவ்வளவு பொருத்தமில்லாத காரியத்தில் என்னால் தலையிட்டுக் கொள்ளமுடியாது.

நீ அப்படிச் சொல்வது எனக்கு வருத்தமாயிருக்கிறது. உண்மையில் மிகவும் வருத்தமாயிருக்கிறது. ஏனென்றால் நீ வராமல் போனால் நாங்கள் இருவர் மட்டும் தனியாக அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியிருக்கும்.

நீங்கள் இருவரும் தனியாகச் செய்கிறதா ? என்ன இது ? இந்த மனிதனுக்கு நிச்சயம் பைத்தியம்தான். இரு, எவ்வளவு நேரம் நீங்கள் அங்கே தங்குவதாயிருக்கும். ஒருவேளை இரவு முழுதும் தங்க வேண்டியிருக்கலாம்.

இப்பொழுதே புறப்பட்டால், சூரியன் உதிக்கு முன் எப்படியும் இங்கு திரும்பி வந்துவிடலாம்.

ஒரு வண்டினால் விளைந்த இந்த விபரீதக் காரியம் திருப்தியாக முடிந்தவுடன் உன் வெறி விட்டுவிடுமா ? கடவுள் அப்படியே அருள் புரியட்டும்.

*வளரும் . . . . .*



# நற்றிணை— ஆங்கிலம் !

பேராசிரியர் சி.அ.சங்கரநாராயணன்
சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதாளர், தமிழ்நாடு அரசு

152

## நற்றிணை—122

சிறைப்புறமாகத்தோழி தலைவிக்கு உரைப்பாளாய்த் தலைவன் கேட்பச் சொல்லியது

**குறிஞ்சி** **செங்கண்ணனார்**

இருங் கல் அடுக்கத்து என்னையர் உழுத
கருங் கால் செந்தினை கடியுமுண்டென
கல்லக வரைப்பில் கான் கெழு சிறுகுடி
மெல் அவல் மருங்கின் மௌவலும் அரும்பின
நரை உரும் உரறும் நாம நள் இருள்
வரையக நாடன் வரூஉம் என்பது
உண்டுகொல் அன்றுகொல் யாதுகொல் மற்று என
நின்று மதி வல் உள்ளமொடு மறைந்தவை ஆடி
அன்னையும் அமரா முகத்தினள் நின்னொடு
நீயே சூழ்தல் வேண்டும்
பூ வேய் கண்ணி அது பொருந்துமாறே

## Narrinai — 122

**MAID FRIEND SPEAKS ..**

**KURINCHI** **SENGKANNANAR**

So blue lily eyed Viola lady! on dry hillock
wine red millet crop grown by my brethren in
advance are reaped; panicle strings picked;
rare in siRukudi lowland zone,Queen of Night,
numinous catalan chameli bloom royal!
apt season for flash and thunder cymbals clash!
mid-pitch dark! highland lord comes and goes, --
a giggle-gay town talk! suspects Ma!
licit or lie, hers is musical anger.
yet, is it worth, to affair in stealth,
alone, you, you, you only can plan or say!

*To Continue...*



# எண்பதாண்டு வாழ்ந்திருந்தால்....!


முனைவர் தேவி நாச்சியப்பன்

160

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் பங்காளி, இராயவரம் "பஞ்சுக்கார வீடு" என்ற பட்டப் பெயர் கொண்ட வீட்டைச் சேர்ந்த சேது என்ற ராம. ராமசாமி அவர்கள் 17.04.2002 ல் எழுதிய கட்டுரை.

எண்பதாண்டு வாழ்ந்திருந்தால்....

---



குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா என்பதைவிட நான் முதலில் காண்பது, “மூளிநாயகி” (பட்டப்பெயர்) வீட்டு வள்ளியப்பண். அவர்கள் நன்றி உணர்வு, பண்பு இவை என் கண் முன் நிற்கின்றன. அவர்கள் அன்புடன் எப்பொழுதும் சொல்லுவது "ஐயாவால்தான் நான் வங்கியில் சேர்ந்து இந்த நல்ல நிலையில் இருக்கிறேன்."

வள்ளியப்பண்ணன் அவர்கள் பள்ளத்தூர் யூனியன் கிளப் விழா ஒன்றில் திரு. அ. மு. மு. முருகப்ப செட்டியார், திரு. ப. வ.ராம. குழந்தையன் செட்டியார் இவர்கள் முன்னிலையில் பேசும் பொழுது, "எனக்கும் பள்ளத்தூருக்கும் தொடர்பு உண்டு. திரு. அ.மு.மு.முருகப்ப செட்டியார் அவர்கள் மூலம், எங்கள் குடும்ப நலனில் அக்கறை கொண்ட எனது பங்காளி மதிப்பிற்குரிய பஞ்சுக்கார ராமஞ் செட்டியாரவர்கள் சிபார்சில் இந்தியன் வங்கியில் சேர்ந்தேன். எங்களூர் குழந்தையன் செட்டியார் அவர்களும் என்னிடம் அபிமானம் கொண்டவர்கள். இவர்கள் முன்னிலையில் என்னைப் பங்கு கொள்ளச் செய்தது எனக்கு கிடைத்த பாக்கியம்." என்றார்கள்.

இவர்களைக் குழந்தைக் கவிஞராகத் தோற்றுவித்தது "மலரும் உள்ளம்" முதல் வெளியீடு. எங்கள் வீட்டிற்கு வந்து என் பெரிய தகப்பனாரிடமும் தகப்பனாரிடமும் பிரதிகள் கொடுத்து ஆசி பெற்றுச் சென்றார்கள். எப்பொழுது இராயவரம் வந்தாலும் எங்கள் வீட்டிற்கு வந்து போவதை வழக்கமாக வைத்திருந்தார்கள். இவர்கள் எண்பது ஆண்டு வாழ்ந்திருந்தால் இன்னும் எத்தனையோ கவிதைகள் உருவாகி இருக்கும். குழந்தைகள் ஆடிப்பாடி மகிழ்வார்கள்.

திரு. செல்லகணபதி அவர்களும் குழந்தைக் கவிஞர் வழி செல்கிறார்கள். இவர்கள் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கவர் திரு. செ.மெ. பழனியப்ப செட்டியார் அவர்கள் (பழனியப்பா பிரதர்ஸ்).

குழந்தைக் கவிஞர் புகழ் வாழ்க! வளர்க! என வாழ்த்துகிறேன்.

நன்றி மறவா நாயகன்.



## செவ்விசை மாமணி திருமதி சீதை மெய்கண்டான்

169

### பன்னிரண்டாம் திருமுறை

### சேக்கிழார் – திருத்தொண்டர் புராணம்

‘தொண்டை நாடு சான்றோர் உடைத்து’ என்ற முதுமொழிக்கிணங்க, தொண்டை நாட்டு புலியூர்க்கோட்டத்துக் குன்றத்தூரில் (இன்றைய சென்னைக்கு அருகில்) அருண்மொழித் தேவர் என்ற சேக்கிழார் கி.பி.12ஆம் நூற்றாண்டில் அவதரித்தார். இவர் இரண்டாம் குலோத்துங்க சோழனின் பிற்பகுதியிலும் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியின் முற்பகுதியிலும் வாழ்ந்திருந்தார் என வரையறுத்துள்ளனர். இவர் சோழ மன்னனின் முதமைச்சராக இருந்தவர் என்பது ஒரு முக்கியச் செய்தி. சோழ மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க, இறைவன் “உலகெலாம்” என முதலடி எடுத்துக்கொடுக்க, திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணத்தை எழுதினார். தமிழகத்தில் பல காலங்களில், பல ஊர்களில், பல குடும்பங்களில் பிறந்த சாதி, இனப் பாகுபாடு பாராமல் சிவனடியார்கள் என்ற ஒரே கருத்தில், அவர்களின் வாழ்க்கையை வரைந்துள்ளார்.



சிதம்பரத்தில் ஒரு சித்திரைத் திருவாதிரை நாள் தொடங்கி, அடுத்த ஆண்டு சித்திரைத் திருவாதிரை நாள் வரை எழுதப்பட்ட ஒரு வரலாற்று ஆய்வு நூல் எனக் கொள்ளலாம். சோழன், சேக்கிழாருக்கு தொண்டர் சீர் பரவுவார் எனப் பட்டமும் ஞானமுடியும் சூட்டி, யானை மீது ஏற்றித் தானும் ஏறி இரண்டு கைகளினாலும் கவரிவீசி உலாவந்து மகிழ்ந்தான் என்கிறது வரலாறு. தொண்டர்களிடையே உயர்வு, தாழ்வு எனப் பாராமல், சமூக நீதியினைக் காக்கும் கண்ணியத்துடன், பிறமொழிச் சார்பு ஏதுமின்றி தமிழ்நாட்டு அடியார்களைப் பற்றி அகிலமெங்கும் உயரவைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு எழுதப்பட்ட ஒரு சமுதாய நூல் என்பதால் இது பன்னிரண்டாம் திருமுறையாகப் போற்றப்பட்டு வருகின்றது. சுந்தரரின் திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பிஅவர்களின் திருத்தொண்டர் திருவந்தாதி என்ற இருநூல்களையும் கொண்டு 63 நாயன்மார்களைப் பற்றியும் பாடப்பட்டது இந்தப் பெரியபுராணம். “கருங்கடலை கைநீத்துக் கொளல் எளிது முந்நீர்க் கடற்கரையின் நேர்மணலில் எண்ணி அளவிடலாம்; வானத்துத் தாரகையை அளவிடலாம் சங்கரன்தாள் தமது சிரங்கொள் திருத்தொண்டர் புராணத்தை அளவிட நம் சேக்கிழார்க்கு எளிதலது தேவர்க்கும் அரிதே!” என சேக்கிழாரைப் பாராட்டினர் அறிஞர் பெருமக்கள். சேக்கிழார் தம் அமைச்சர் பதவியைத் தன் தம்பி பாலறாவாயருக்குத் தந்துவிட்டு அவரைத் தொண்டைமானாக்கியதோடு தவநெறிபூண்டு தில்லையிலேயே தங்கியிருந்து இறைவன் திருவடி சேர்ந்தார். 4286 பாடல்களை உடைய பெரியபுராணம் 63 அடியார்கள் பற்றியும் 9 தொகையடியார்கள் பற்றியும் கூறும். இவற்றில் திருஞானசம்பந்தருக்கும் மட்டும் 1256 பாடல்கள் அதாவது மூன்றில் ஒரு பங்கைத் தனிப்பட்ட முறையில் பாடியிருப்பது சிந்திக்கத்தக்கது. களப்பிரருக்குப் பின்னும் வீழ்ச்சியடைந்த தமிழ்மொழியும் தமிழ் நாகரிகமும் விழித்தெழுவதற்காக வீறுகொண்டு எழுந்து வந்தவர் சம்பந்தர். ஏழாம் நூற்றாண்டில் இப்போராட்டத்தை நடத்தி ஞானசம்பந்தர் வெற்றி கொண்டிராவிடில், பன்னிரண்டாம் நூற்றாண்டில் சைவம் என்பதும் தமிழ் என்பதும் ‘பொய்யாய்க் கனவாய்ப்’ போயிருக்கும் என சேக்கிழார் நம்பியது போல் தெரிகின்றது. திருஞானசம்பந்தரால் தொடங்கப்பெற்ற சமயப்புரட்சி 9ஆம் நூற்றாண்டில் முழுவளர்ச்சிப் பெற்றது. மூவர் முதல்வர் எனப்படும் மணிவாசகர், திருமூலர், திருஞானசம்பந்தர் சைவத்தையும் முத்தமிழையும் காத்தெடுத்த முப்பெரும் தளபதிகளாவர். இறைவனுடைய அடியார்களை முதன்முதலில் வீரர்கள் எனக் கூறியவர் சேக்கிழாராவார். தொண்டு என்ற பண்பே காவியத் தலைவனின் இடத்தை இக்காப்பியத்தில் பெறுவது ஒரு புதுமையாகும். “கேட்குந போலவும், கிளக்குந போலவும், இயங்குந போலவும், இயற்றுந போலவும் அஃறிணை மருங்கினும் அறையப்படுமே” என நன்னூல் பொதுவியல் இலக்கணமும் இடம் தந்து பேசலின் காப்பியத் தலைமையை ஒரு பண்புக்குத் தருவதில் தவறில்லை என்பார் அ.ச.ஞானசம்பந்தம் அவர்கள். இறைவனடியார்களின் பண்பினை ஒரு சேரக்கூறும் போது, சிவனை முழுமுதற் பொருளாக ஏற்றுக் கொள்ளுதல், தன்னலத்தை அடியோடு துறந்துவிடல், பிறர் பொருட்பட வாழ்தல், அச்சம் எனும் பேயை அகற்றுதல், குறிக்கோளுக்காக உயிர்விடவும் தயாராயிருத்தல் என்பனவற்றில் ஒரே இயல்புடையவர்களாக இருந்தமை அறியப்படவேண்டும். எல்லாக் காப்பியங்களைப் போல சேக்கிழாரும் பாயிரம் என்ற கடவுள்வாழ்த்துப் பாடத் தொடங்கியுள்ளார். “உலகெலாம்” என்ற அடி எடுத்துக் கொடுத்தவர் ஆண்டவனாவார். கடவுள் வாழ்த்துப் பாடும் மரபு தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே இருந்ததற்கு தொல்காப்பியமே சான்றாகும். “கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே” என்பது தொல்காப்பியம். எட்டுத்தொகை நூல்களில் முதற்கண் கடவுள் வாழ்த்து இருக்கும். பதிற்றுப்பத்திற்கும் பரிபாடலுக்கும் கடவுள்வாழ்த்துப் பாடியவர் தெரியவில்லை. கலித்தொகைக்குக் கடவுள் வாழ்த்து நல்லந்துவனார் பாடியுள்ளார். பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பவர் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு என அனைத்திற்கும் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். “கொடிநிலை கந்தழிவள்ளி என்ற வடு நீங்கு சிறப்பின் முதலான மூன்றும் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே! (தொல்காப்பியம்)” என்பது அப்பாடல்.

*வளரும் . . . . .*



பெரும் பேராசிரியர் செ.இரா.செல்வகுமார்
கனடா

120

பேசுபகர் சாற்றுநவில் செப்புநுவல் ஓதுகரை கூறுபறை சொல்விளம்பு கூவலுரை வாழ்த்து பொழிவு குளறு வியம்பு கழறு முழங்கு பிதற்று மொழி

—

22 சொற்களை வெண்பாவாகக் கோத்துத் தந்துளார் "அய்யப்பன் அய்யப்பன்" என்பார்.

நல்வாழ்த்து.

இதில் கிள (கிளத்தல்) போன்ற இன்னும் சில சொற்கள் இல்லை, ஆனால் பஃறொடை வெண்பாவாக யாத்தால் அவற்றையும் இன்னும் சில சொற்களையும் சேர்த்து ஆக்க முடியும் என்று நினைக்கின்றேன்.

ஆங்கிலத்தில் அவர் கொடுத்துள்ள விளக்கங்களை மேம்படுத்தலாம்.

பகிர்வுக்கு அடிப்படை அவருடைய வெண்பா.

இன்னும் மிகப்பல சொற்கள் உள்ளன.

கிளத்தல், மிழற்றுதல், என்னுதல், நொடிதல் (நொடித்தல்), அசைத்தல், ஏவுதல் (சீவசிந்தாமணியில் ஏவாவிருந்த வடிகள் என்று வரும்),
கதைத்தல், குயிற்றுதல், பன்னுதல் ( நின்றுநின்று பேசுதல்)
விள்தல் (பாவுதல் என்றும் ஒரு சொல் உண்டு).





மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார்

## 3. பொருள் நிலை . . .

## செல்வப் பேரன்பர்களே !

துக்கம் யாண்டும் யார்க்கும் அமையாது மேலும் ஒரு பெரு நூலகத்துப் புகுவார்க்கு இருநிலை உரியன. ஒன்று கல்விநிலை எனையது அறிவுநிலை. வள்ளுவர் ஞால மக்களைப் பகுத்து உனர்ந்த முறை யாது ? புறத்தும் அகத்தும் கண்ட மக்கள் நிலைகள் யாது ? நிலைக்கேற்ப விதித்த வழிகள் யாது ? உளம் பதிப்பான் ஆளும் சொற்களும் நடைகளும் பா ? என ஆரான் அறிவைக் காண்பது கல்வி நிலை.இவை யெல்லாம் யான் இன்று தொட்டுச் செய்யுங் குறள்களாகும்.

பொறுத்தல் இறப்பினை என்றும் ; அதனை மறத்தல் அதனினும் நன்று

சால்பிற்குக் கட்டளை யாதெனின், தோல்வி துலையல்லார் கண்ணுங் கொளல்

(152)

தன்னுயிர் தானறப் பெற்றுனை ஏனைய

மன்னுயி ரெல்லாம் தொழும்

வாழ்க்கைக்கு வேண்டும் அளவு யாது ? பொருளுக்கும் மனத் தூய்மைக்கும் பொருந்திய அடிப்படை யாது ? என்றெல்லாம் மக்கள் வினவிக் கொள்வதில்லை. பொருள் இன்றியமையாதது என்பதற்காக, அதற்கோர் ஒழுக்க வரம்பின்ற போய் விடும் , உடலும் கல்வியும் அறிவும் இன்றியமையாதன வெனினும் அவற்றின் வளர்ச்சிக்கும் ஒழுக்க வரம்பு உண்டன்றே !

இன்றியமையாப் பொருளை சுட்டற் கண்ணும் செலவிடற் கண்ணும் மக்கள் உறும் பல மாசுகளைக் கண்ட வள்ளுவர் ' பொருளல்லது இல்லை பொருள்' என்று சிறப்பித்த வள்ளுவரே – யாது கூறினார் ? ' பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள (241) என இழித்துரைத்தார். * பழி மலைந்து ஆக்கம் எய்துவதைக் காட்டினும், கழி நல் குரவே தலை ' எனப் பொருளுடைமையினும் புகழுடைமை காட்டினார். மனம் அழுக்குறினும் உறுக என்று பொருளீட்டல் நன்றா ? பொருள் வாராதொழியினும் ஒழிக என்று மனத் தூய்மை காத்தல் நன்றா ? என வள்ளுவரை வினவின்,

இன்றி யமையாச் சிறப்பின வாயினும் குன்ற வருப வீடன்

(961)

என நேர்விடை இறப்பர். பேதை, கற்முன், அறிவுடையான் என்ற வேறுபாடின்றி மக்கள் மனங்களெல்லாம் பொருளொன்றின்மேலதாய் அழுக்கடையக் கண்ட ஆசிரியர், தூய்மை சொல்லும் இடம் பொருட் கண்ணது என் துணிந்துவிட்டார். தனித்தோர் வாழ்வு ஆகுக, தொண்டு செய்வான் தோற்றிய கழகங்கள் ஆகுக, அவைகள் ஆகுக, பேரரசுகள் ஆகுக, பொருளில் ஒரொ முங்கு யாண்டுக் காணப்படுமோ ஆண்டு மன வொழுங்கும் நாணய மதிப்பும் காணப்படும்.

பொருளொழுக்கமே தன் அகவொழுக்கத்திற்கு உரைகல் என்பது வள்ளுவம். இக்கருத்தாளன்றே மனப் பண்பு பேசும் இடந்தொறும் பொருட் பண்பிணையும் தொடர்பு படுத்திப் பேசுவர். கள்ளாமை, வெஃகாமை, அதிகாரங்கள் சான்று முதல் காண்க.

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை அன்றே யொழிய விடல்

இவ்விரண்டும் மனத் தூய்மை வேண்டும் பொருட் குறள்கள்.

தாய் குழந்தைமேல் வைத்த பேரன்பால்,நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர வேண்டுமென்று மிக்கவுணவை இடைவிடாது ஊட்டுகிறாள். தாயன்பால் பிள்ளை நோய்வாய்ப்படுகின்றது. கணந்தோறும் மெலிகின்றது. குழந்தை நோய் நீங்கிப் பருத்து வளர்தற்கு மருந்து வினவுகிறாள். *

*வளரும் . . . . .*



# தமிழன்னை நான்மணிமாலை


*செம்மொழிக்கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு*

சங்க இலக்கிய ஆய்வறிஞர்


62

**எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை**
**வீயாது பின்சென் றடும்.**

எவ்வகைப் பகை கொண்டவரும் தப்பிப் பிழைப்பர்; தனது தீய வினையால் வரும்பகையோ விடாமல் பின்தொடர்ந்து அழித்து விடும். இது தெய்வப்புலவர் எச்சரிக்கை. உலக மக்களுக்காகவே ஓலைச்சுவடிகளில் எழுதிவைத்தது அவரது திருக்கை.

பாவச் செயல்களைத் தவிர்த்தால் மட்டுமே தீவினைகளிலிருந்து தப்ப முடியும். வாழ்க்கையும் இறுதியில் துயரங்கள் இன்றி முடியும். தீய எண்ணங்களை விலக்கித் தெளிவுடன் துலங்குவோர்க்கே உண்டு வெற்றி. திறமுடன் துணிவோடு செல்வோர்க்கே பெற்றி. உத்தியோடு செய்வதாக எண்ணிச் சதிவலை பின்னுவோர்க்குத் தற்காலிக வெற்றிகள் இருக்கும். ஆயினும் அந்த வலை தன்னைப் பின்னியவர்களின் கழுத்தையே காலம் பார்த்து இறுக்கும்.

பண்பில்லாதோரின் மனம் தூய அன்பைக் கண்டால் கூட குறுகும். பகைமையை அறவே அகற்றி அன்பை வளர்த்தால் மட்டுமே மாந்தரிடையே நல்லிணக்கம் பெருகும். குறள் நெறிகளை நாளும் நெஞ்சில் நிறுத்துவோர் உய்வர். தீய நெறிநோக்கிச் செல்வோர் மென்மேலும் தீமைகளையே செய்வர். பகைமையின்றி பல்லோரையும் அன்பினால் அணைத்து மாற்றுக என்று அறுவுறுத்தினாள் தமிழன்னை. குறள் நெறிகளால் மெருகூட்டிக் கொண்டேன் என்னை. ஆற்றல் தந்தமைக்காக அன்னைக்கு எனது நான்மணிமாலை!

## அகவல்

நெறிகள் அறிந்து நேர்மை பயின்று
செறிவும் அடைந்தேன் சீர்மிகப் பெற்றேன்
ஆருயிர் அன்னை அவள்தான் அளித்தாள்
பேருண் மையிதைப் பெருமையாய் விளம்பிப்

பதிற்றுப் பத்தின் பாக்களை நெஞ்சினில்
பதித்ததை இங்கே பகிரவும் மகிழ்ந்தேன்
எட்டுத் தொகையின் எழில்மிகு தொகுப்பில்
கிட்டும் தகவலில் கிளைத்தது புலமை

சேர மன்னர் சிறந்த பதின்மர்
சேரும் தொகுப்போ செழுமைப் புலவர்
பதின்மர் தந்தவை பத்துப் பத்தாம்
அதனில் எட்டே அடையப் பெற்றேம்

எண்பது பாக்கள் இருமரபுச் சேரரைப்
பண்புடன் உரைப்பவை பாங்கில் சிறந்தவை
உதியஞ் சேரலின் உயர்வழித் தோன்றல்
மதிப்புடை ஐவர் மாண்புடை அந்துவஞ்

சேரல் இரும்பொறை சேர்வழித் தோன்றல்
சீருடை இருவர் சேர்த்திட எண்மர்
மறத்தினைப் போற்றியே மன்னர்
திறன்களை நாட்டும் தேர்ந்த படைப்பே.

## 66

## வெண்பா

படைத்தான் நலமாய்ப் பரமன் துயரைத்
துடைத்தாள் தமிழ்த்தாய் துலக்கி – உடைத்தேன்
தயக்கம் உளத்தின் தகைமை உணர்ந்தேன்
மயக்கம் களைந்தேன் மகிழ்ந்து.

## கலித்துறை

மகிழ்ந்தேன் சிறந்தேன் மதியில் செழித்தேன்
மலையளவே
நெகிழ்ந்தேன் கிளர்ந்தேன் நெறிகள் வளர்த்தேன்
நிறைவுடனே
அகழ்ந்தேன் பலவாய் அறிந்தேன் அரசர்
அருமைகளை
திகழ்ந்தேன் உலகில் திடமாய் விளங்கும்
திறமுடனே.

## விருத்தம்

திறமுடை மாந்தர் தெளிந்த நட்பால்
திருமிகப் பெற்றேன் திரளமுதாய்
அறமுடைச் சான்றோர் அருகில் பெருக
அகப்பொலி வுற்றேன் தமிழருளால்
[
மறத்துடன் ஓங்கி மனத்தைக் காத்து
மதிப்புடன் வெல்லும் மகிழ்வுகளால்
சிறப்புடை எண்ணச் செழுமை கண்டேன்
செறிவுகள் கண்டேன் செயல்களிலே !



மருத்துவமாமணி தாரா நடராசன்



A to Z பெண் நலம்

# தாய்ப்பால்... ஆயுட்காலப் பரிசு!



'பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகளே ஒஸ்தி' என்று நினைத்த காலம் மாறி இன்று குழந்தையில் ஆணென்ன? பெண்ணென்ன? என்ற சம நோக்குப் பார்வை அதிகரித்துள்ளது. தவிர ஆண் குழந்தையானாலும் பெண் குழந்தையானாலும் தாய்ப்பால் மிக முக்கியம்.

குழந்தை பிறந்தவுடன் அழ வேண்டும், அதுதான் இயற்கை. பாதுகாப்பான சூழலில் கருவில் உருவான குழந்தை, பிரசவத்தில் வெளி உலகத்தை எட்டிப் பார்க்கிறபோது, இதுவரை இல்லாத ஒரு புதிய சூழ்நிலையை உணர்கிறது. காற்றை இழுத்து, மூச்சுவிட ஆரம்பிக்கிறது. அந்தப் புதிய அனுபவம் தான் குழந்தையின் அழுகுரல். அதன் மூலம், இந்த உலகத்துக்கு நான் பத்திரமாக வந்துவிட்டேன் என்று அறிவிக்கிறது.

'குழந்தை பிறந்தவுடன் அழணும்; இல்லாவிட்டால் வீட்டில் மற்ற எல்லோரும் அழும்படி ஆகிவிடும்' என்பார் வாரியார் ஸ்வாமிகள்.

'தாயிற் சிறந்த கோவிலும் இல்லை' 'தாய்ப் பாலைவிடச் சிறந்த பாலும் இல்லை'. தாய், தம் குழந்தைக்குத் தரும் ஆயுட்காலப் பரிசுதான் தாய்ப்பால். காரணம், அவள் கொடுக்கும் பால் குழந்தையின் பசியாற்றும் சாதாரண உணவு இல்லை. ஒரே உணவு அதுதான். குழந்தை பிறந்து ஒன்றிரண்டு நாட்கள் வரை சுரக்கும் சீம்பாலை ஆங்கிலத்தில் 'கொலஸ்டிரம்' என்பார்கள். இது வழக்கமான வெள்ளை நிறத்தில் இல்லாமல் பழுப்பு நிறத்தில் இருக்கும். சற்று 'திக்'காகவும் இருக்கும். இதைப் பார்த்து, இன்றைய நவநாகரிக இளம் தாய்மார்கள் சிலர், இது தாய்ப்பால் இல்லை; இதைக் குழந்தைக்குக் கொடுக்கக் கூடாது என்று நினைக்கிறார்கள். இது முற்றிலும் தவறு. இதைப் பற்றி பிரசவத்துக்கு முன்பாகவே, தாயாகவிருக்கும் இளம் பெண்களுக்கு எடுத்துச் சொல்லி, புரிய வைக்க வேண்டும்.

அபரிமித சத்துக்கள் கொண்டது சீம்பால். அதில் இருக்கும் கொழுப்பு பிறந்த குழந்தை எளிதாக ஜீரணிக்கும் வகையில் உள்ளது. தவிர, குழந்தைக்கு ஆரம்பகாலம் முதல் நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கிறது. இது பொதுவாகக் குறைவாகத்தான் கிடைக்கும் என்பதால்



www.kalkionline.com

**கருவில் தொடங்கி கேள்வி-பதில் 2012** பெண் நலம் தொடர்பான உங்கள் கேள்விகளை / சந்தேகங்களை எழுதி உங்களின் பெயர், வயது, முகவரி, இ-மெயில் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள். தேர்ந்தெடுத்த கேள்விகளுக்கு நிபுணர்கள் பதில் அளிப்பார்கள். எதிர்ப்பக்கத்தில் உள்ள கூப்பனை தபால் உறையின் மேல் ஒட்டி அனுப்பவும்.



## மருத்துவமாமணி தாரா நடராசன்

## டாக்டர் தாரா நடராஜன்

கிடைத்த பொக்கிஷத்தை வீணாக்காமல், முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலமாக குழந்தையின் ஆரோக்கியத்துக்கு பலமான அஸ்திவாரம் இடப்படுகிறது.

நார்மல் டெலிவரி மட்டுமில்லை; சிசேரியன் மூலம் குழந்தை பிறந்தாலும் கூட, தாய்க்கு, உடனே பால் சுரக்க ஆரம்பித்துவிடுகிறது. இது கடவுளின் வரப்பிரசாதம்.

சில தாய்மார்கள் பிரசவித்த சில வாரங்களிலேயே குழந்தைக்குத் தாய்ப் பால் கொடுப்பதை நிறுத்திவிடுகிறார்கள். இது மிகத் தவறு. தாய்க்கு எய்ட்ஸ் போன்ற தீவிரமான காரணங்கள் இருந்தாலோ, குழந்தைக்கு பால் அலர்ஜி பிரச்னை இருந்தாலோதான் பால் கொடுக்காமல் இருக்கலாம். இன்னும் சிலர் போதுமான பால் சுரக்கவில்லை என்று பாலை நிறுத்திவிடுகிறார்கள். குழந்தை, தாயிடம் பாலைக் குடிக்கக் குடிக்கத்தான் மேலும், மேலும் தாய்க்கு பால் சுரக்கும்.

சில தாய்மார்களுக்கு, தாய்ப்பாலை நிறுத்த விருப்பம் இல்லை என்றாலும் கூட, குழந்தைக்குத் தேவையான அளவுக்குப் பால் சுரக்குமா? என்ற சந்தேகம் இருக்கும். இதுவும் தவறுதான். ஒரு தாய், தமக்குப் போதுமான அளவுக்குப் பால் சுரக்காது என்று நினைக்கத் தொடங்கினாலே, பால் சுரப்பதில் பாதிப்பு ஏற்படும். எனவே, பாசிடிவ் நம்பிக்கை வேண்டும். இந்த எண்ணமே தாராளமாகப் பால் சுரக்க வழி செய்யும்.



இன்னும் சில இளம் தாய்மார்கள் தங்களுக்கு மார்பகம் சிறியதாக இருப்பதால், அதிகமாகப் பால் சுரக்காது என்று நினைத்து, மன வருத்தமடைகிறார்கள். இதுவும் தேவையற்றது. மார்பகத்தில் இருக்கும் சிறப்பு சுரப்பிகள் மூலமாகவே தாய்ப்பால் சுரக்கிறது. அளவைப் பொறுத்து அல்ல.

குழந்தைக்கு ஒரு நாளில், எத்தனை தடவை தாய்ப்பால் கொடுப்பது?

எப்போதெல்லாம் குழந்தைக்குப் பசி எடுக்கிறதோ, அப்போது தாமே, தம் தேவையை அழுகையின் மூலமாக உணர்த்தும். அதேபோல, குழந்தை பால் குடித்துக்கொண்டே இருக்கிற போது வயிறு நிரம்பிவிட்டால், அது தாமாகவே நிறுத்திவிட்டு, வாயை எடுத்துவிடும்.

சில சமயங்களில், குழந்தைக்குப் பசி எடுத்து, பால் குடிக்க ஆரம்பிக்கும். தாய் குழந்தையை தம்மோடு அணைத்துப் பாலூட்டும் போது, குழந்தைக்கு தாயின் அரவணைப்பும் பாலோடு சேர்ந்து கிடைக்கும். அது குழந்தைக்கு ஒரு வித திருப்தியை ஏற்படுத்தும். அந்த மாதிரியான தருணங்களில், வயிறு நிரம்பாவிட்டாலும் கூட, குழந்தைக்கு வயிறு நிறைந்த திருப்தி ஏற்பட்டுவிடும்.

அப்போது குழந்தைக்கு அடுத்த தடவை சீக்கிரமே பசி எடுத்துவிடும். 'இப்போதுதானே பால் கொடுத்தோம்! அதற்குள் குழந்தைக்குப் பசிக்காது; பாலுக்கு அழவில்லை' என்ற முடிவுக்கு வந்து விடக்கூடாது. மறுபடியும் பால் கொடுக்க வேண்டும்.

(பாப்பா வளரும்)

எழுத்து வடிவம் : எஸ். சந்திரமௌலி

படம் : கௌதம்ராம்




**கருவில் தொடங்கி... கேள்வி-பதில் 2012**
கல்கி - வார இதழ், கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32.

16.9.2012 « கல்கி 87

www.kalkionline.com



திரு. இரா. குமரவேலன்



## CHAPTER 3

### BHARATAN AS REGARDED BY THE HERO OF THE EPIC

In Kishkinda Kandam, when Tara persuaded her husband Vali, the Vanara king, not to fight against Sugriva as he had the help of Rama, Vali replied to her and consoled her that Rama ( அருளின் ஆழியான் ) held his brother in great affection and so he would not intervene in the fight in which he and his brother were involved. Here through the words of vali the poet expresses the intense and ardent love of Rama for his brothers.

தம்பிய ரல்லது தனக்கு வேறுயிர்
இம்பரி னிலதென எண்ணி ஏய்ந்தவன்

In the same Kandam, when lakshamana raised a doubt whether Sugriva would do no harm to them for he sought the help of a third man to kill his own brother Vali, Rama replied

அத்தா இதுகேளென ஆரியன் கூறுவானிப்
பித்தாய விலங்கின் ஒழுங்கினைப் பேசலாகுமோ
எத்தாயார் வயிற்றிலும் பின்பிறந் தார்களெல்லாம்
ஒத்தால் பரதன் பெரிதுத்தமன் ஆதலுண்டோ

Should we speak of the rough conduct of animals, if all were alike in their devotion to their brothers, how can my bharata be placed the first in the list of loyal brothers" here one can see how kamban reveals the affectionate heart of rama and how he always held bharata in high esteem. The situation is apt and the words are pointed.

in the battlefield of lanka, when Rama lamented over the fall of Lakshmana by the Brahmastra of Indrajit, he remembered Bharata and pitied that bharata would not rule the kingdom if he ( Bharata ) came to know the fall of Lakshmana and others.

மாண்டாய் நீயோ யானொரு போதும் உயிர் வாழேன்
ஆண்டா னல்லன் நானிலம் அந்தோ பரதன் தான்
பூண்டா ரெல்லாம் பொன்றுவர் துன்பம் பொறையாற்றர்
வேண்டா வோநான் நல்லற மஞ்சி மெலி வுற்றல்

Similarly , when Indrajit killed Maya Sita Before Han–uman and went to Nikumpalai to perform a yaga after telling that he was giving to destroy Ayodhya ,Rama thought of his brother Bharata and said :

தாயாருந் தம்பிமாருந் தவம்புரி நகரஞ் சாரப்
போயின னென்ற மாற்றஞ் செவித்துளை புகுதலோடும்
மேயின வடியினின்ற வேதனை கனைய வேந்த
தீயிடைத் தணிந்த தென்னச் சீதைபால் துயரந்தீர்ந்தான்
பேரிட அவதியுண்டோ எம்பியர் பிழைக்கின்றரோ

தாதைக்குஞ் சடாயு வான தாதைக்குந் தமியளாய
சீதைக்குஞ் கூற்றங் காட்டித் தீர்ந்தில தொருவன் றீமை
பேதைப்பெண் பிறந்து பெற்ற தாயார்க்கும் பிழைப்பில் லாத
காதல்தம் பியர்க்கு மூர்க்கும் நாட்டிற்கு காட்டிற் றன்றே

உற்றதொன் றுணர கில்லா ருணர்ந்துவந் துருத்தா ரேனும்
வெற்றி வெம் பாசம் வீசி விசித்தவன் கொன்று வீழ்த்தால்
மற்றைவெம் புள்ளின் வேந்தன் வருகிலன் மருந்து நல்கக்
கொற்றைமா ருதியங் கில்லை யாருயிர் கொடுக்கற் பாலார்

These words clearly depict the anxiety of Rama for the welfare of his brother at Ayodhya. For Rama this was even gretaer than his grief for the loss of Sita.

*To Continue……*







இந்திய திருநாட்டின் சுதந்திர நாள் விழாவினைக் கொண்டாட காத்திருக்கும் இந்த ஆகஸ்ட் மாதத்தின் முதல் வார இதழ் 02.08.2023 அன்று மலர்ந்திருப்பது மகிழ்ச்சியாக உள்ளது.

இது 191– ஆவது இதழ். கடந்த 190 வாரங்களாக நாம் இந்த மின்னிதழை வாசித்து வந்த போதிலும் அலுப்போ, சலிப்போ எதுவும் வராமலேயே அதே தமிழ்ச் சுவையுடன் 191– ஆவது இதழையும் தந்திருப்பதை நான் பெருமையோடு பார்க்கிறேன்...

எத்தனை பணிச்சுமைகளுக்கு இடையிலும், தாய்த் தமிழுக்கு என நடத்தப்படுகின்ற உலகத் தமிழ் மின்னிதழை சுமையாக இன்றி சுகமாக நடத்தி வரும் முனைவர். ந. அருள் மற்றும் அவரது இதழ் குழு உறுப்பினர்கள் அனைவரையும் நேயர்கள் ஆகிய நாம் பாராட்டிதான் ஆக வேண்டும் .

இடர்பாடுகள், இன்னல்கள், தொந்தரவுகள், துயரங்கள் எல்லாம் அடுத்தடுத்து வந்திருக்கலாம்.

இருந்த போதிலும் தொடர்ந்து இதழ்ப் பணியை நடத்தி வருவது என்பது ஒரு இமாலய சாதனைதான்... வாழ்த்துக்கள்.

இந்த வார இதழில் கொள்கை விளக்கக் குறிப்பு பகுதியில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக கொண்டாடப்பட்டு வரும் தமிழ்க் கவிஞர் நாள் விழா மற்றும் தமிழ்நாடு நாள் விழா ஆகிய விழாக்கள் பற்றிய பதிவினைப் படிக்கையில் பெருமைகள் கிடைக்கிறது நமக்கு.

தமிழ் வளர்ச்சித் துறையின் செயல்பாடுகளை இன்றைக்கு நாம் பெருமையோடு பார்த்தும் போற்றியும் வருகிறோம்.

செயற்கரிய செயல்களை தமிழ் வளர்ச்சித் துறை செய்து வருவது தமிழர்கள்... தமிழ்நாட்டில் உள்ளவர்கள் மற்றும் உலகத் தமிழர்கள் அனைவரும் பாராட்டிப் பெருமிதம் அடைந்து வருகிறார்கள்.

இதழின் நூலேணிப் பகுதியில் தொடர்ந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டு வரும் நூல்கள் பற்றிய பட்டியல் வெளியிடப்பட்டு வருகிறது.

இதன் மூலம் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டு இருக்கின்ற நூல்களை அனைவரும் தெரிந்து கொள்ள ஏதுவாக இருக்கிறது.

தமிழெழுச்சிப் பகுதியில் மகாகவி பாரதி மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோரின் அரிய கவிதை வரிகளை நாம் அறிய தருவது சிறந்த ஒன்றுதான்.

ஒவ்வொரு வாரமும் வெளியாகும் ஆசிரியம் மற்றும் அவ்வப்போது பகுதிகள் நேயர்களின் கவனத்தை அதிகமாகவே ஈர்த்து வருகின்றன என்றால் பொய்யல்ல.

நாட்டில் நடக்கும் செயல்களை சுட்டிக் காட்டுவதும், அரிய செய்திகளை எடுத்து நயம்பட சொல்லுவதும் இந்தப் பகுதிக்கு அழகு சேர்த்து வருகிறது.

இந்த வாரம் "யமுனையின் சீற்றம்" குறித்து ஆசிரியம் பகுதியில் நாம் படித்தோம்.

" சூலைத் திங்களில் தொடங்கும் மழைக்காலம், வேக வைக்கும் வெயிலிலிருந்து நம்மைக் காக்க இயற்கை தரும் வரம்" என்ற வரி என்னை வெகுவாக கவர்ந்திருக்கிறது.

மழை போற்றத்தக்கதே. அழகானதே.

ஆயினும் உரிய காலத்தில் பெய்யாமலும், காலம் தவறி பெய்வதும் மழைக்கு அழகல்ல.

இது வழக்கமான ஒன்றாகி போய்விட்டது மழைக்கு. பருவநிலை மாற்றங்கள் தொடர்ந்து ஏற்பட்டுதான் வருகிறது.

அதற்காக மழையை வெறுத்திட முடியுமா?

மழை – அது ஒரு விந்தை...

மழை – அது ஒரு அற்புதம்...

மழை – அது ஒரு அதிசயம் ...

மழைத் துளிகள் பற்றிய "ஒவ்வொரு துளியும் எனர்ஜி" என்கின்ற எனது கவிதை நூலில் வரும் இரண்டு வரிகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்...

" மழைத்துளிகளின் மந்தை—கடல்...

கடல் துளிகளின் விந்தை—மழை..."

இனி நாம் அவ்வப்போது பகுதிக்குச் செல்வோம்...

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .*





முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா ஆட்சி மொழிக் கருத்தரங்கம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் வளர்ச்சித் துறையால் 12.07.2023 அன்று நடத்தப்பட்டதை இப்பகுதியில் பதிவு செய்யப்பட்டு இருப்பது பாராட்டத்தக்கதே.

38 மாவட்டங்களில், ஆறு திங்களில். 100 ஆட்சி மொழிக் கருத்தரங்கம் நடத்திட தமிழ் வளர்ச்சித் துறை முடிவு செய்து இருப்பது ... சபாஷ்...

இது ஒரு பெரிய பணி... மெச்சத் தகுந்த பணி.

12.07.2023 அன்று நடந்த ஆட்சி மொழிக் கருத்தரங்கில் மாண்புமிகு அமைச்சர் திரு. சாமிநாதன் அவர்களின் உரை படித்து மகிழ்ந்தேன்...

"கல்வி சிறந்த தமிழ்நாடு– புகழ்

கம்பன் பிறந்த தமிழ்நாடு"...

என்று மகாகவி பாரதி பாடியது போல,

" கலைகள் செழித்த தமிழ்நாடு–எம்

கலைஞர் உதித்த தமிழ்நாடு"...என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவிதையாக பாடியிருப்பது மிகச் சிறப்பு.

இந்தக் கவிதை வரிகளோடு கலைஞர் நூற்றாண்டுக்காக நான் எழுதிய கவிதையிலிருந்து சில வரிகளை இங்கே சொல்லலாம் என நினைக்கிறேன்...

இதோ...

"தமிழ்நாட்டில் பிறக்கவில்லை ...

காரல் மார்க்ஸ்.

தமிழ்நாட்டில் பிறக்கவில்லை... சேக்ஸ்பியர்.

தமிழ்நாட்டில் பிறக்கவில்லை... சாக்ரடிஸ் .

தமிழ்நாட்டில் பிறக்கவில்லை... பெர்னாட்ஷா.

ஆதலால்தான் தமிழ்நாட்டில் பிறந்தார்... கலைஞர் "



அடுத்த பகுதியாக தேன் துளி பகுதியில் "தேன்" என்ற சொல் காணப்படும் சங்க கால இடங்களையெல்லாம் "தேனீக்களாக" பறந்து போய்ச் சேகரித்து 86 இடங்களை பதிவு செய்து இருப்பது வியக்கத்தக்க செய்தி தான்... வாழ்த்துக்கள்.

இந்தப் பகுதியில் வெளியாகியிருக்கும் "தேனடை " படம் அருமை... அந்தப் படத்தை பார்த்தாலே நாவில் தேன் சொட்டுவது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

தேனீக்களின் கட்டியிருக்கும் தேனடையிலிருந்து பிரிந்து எடுக்கப்பட்ட தேன் நிரம்பி இருக்கும் குடுவைப் படம் என்பது ரொம்ப நுட்பமாக இருக்கிறது

தேன் துளி இரண்டில் "அருந்தமிழில் அமையட்டும் அறிவிப்பு பலகைகள்" என்ற நமது விருப்பத்தை வெளிப்படுத்தும் பகுதியாக அமைந்திருப்பது மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"ஆங்கில எழுத்துக் கூட்டல் முறை எவ்வளவு சிக்கல்களை எண்ணமும் கொண்டிருக்கிறது என்பதை பல்வேறு எடுத்துக்காட்டுகளோடு வழக்கில் வல்லுநர் செந்தமிழ்த்திலகம் திரு. செல்லத்தம்பி சிறீக்கந்தராசா பிரம்மாதமாக எடுத்தியம்பியுள்ளார்.

கட்டுரைகள் எல்லாம் வாசிக்க வாசிக்க ஏதோ ஒரு கிளர்ச்சியை நமது மனங்களில் ஏற்படுத்தி விடுகின்றன...என்பதே உண்மை.

சிறந்த அலுவலராகவும் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா பணியாற்றியதை "நேர்மையைக் கொண்டு நேர்மை காண்பவர்" என்கின்ற சொல்லாடலால் புகழ் மாலை சூட்டி இருக்கும் விதம் மெச்சத் தகுந்தது.

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .*



# பூமழை



பெரும் பேராசிரியர் செ.இரா.செல்வகுமார் அவர்கள் ஒரு நல்ல பகுதியை இந்த வாரம் தொட்டிருக்கிறார்...

திரைப்படப் பாடல்கள் பற்றிய அவரது பதிவுகள் சிறப்பாக இருக்கிறது. திரைப்படப் பாடல்களில் நிறைய குறைகள் இருப்பதை நாம் ஒவ்வொரு காலகட்டங்களிலும் பார்த்திருக்கிறோம்...

பெரும்பேராசிரியர் குறிப்பிட்டது மிக சுருக்கம் என்றாலும் இந்த சுருக்கம்தான். நாம் விரிவாகவே பார்த்தோமேயானால் திரைப்படங்களின் பாடல் வரிகளில் நிறைய பிழைகளைக் காணலாம்.

"அந்தி மழை பொழிகின்றது"...

என்ற பாடலில் "ஒவ்வொரு துளியிலும் உன் முகம் தெரிகின்றது" என்று எழுதப்பட்டிருப்பதை போல

"ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறது" என்ற வரியை கொஞ்சம் திருத்தி

"ஒவ்வொரு பூவுமே சொல்கிறது"

... என்று எழுதியிருக்கலாம். இப்படியே நாம் பார்த்தோமேயாகில் நிறைய குறைகளைக் காண முடியும்.

இறுதியாக பெரும் பேராசிரியர் சொன்ன "தன் அறியாமையும் தவறும் Poetic license ஆகாது என்பது ஏற்புடையதே.

புலவர் விஜயலட்சுமி அவர்களின் "உலகு தழுவிய பொதுநோக்கு நூல் –திருக்குறள்" அற்புதமான கருத்துக்களை பல்வேறு அறிஞர்களின் மேற்கோள்களோடு சொல்கிறது. வாசிக்க சுகந்தமாக இருக்கிறது.

சர் ஆல்பர்ட் ஸ்விட்சர் என்ற மேலைநாட்டு அறிஞர் "இந்திய நாடு தன் சிந்தனையும், அதன் வளர்ச்சியும் "என்ற நூலில் உயர்ந்த ஞானத்தைச் சிறந்த முறையில் கூறும் திருக்குறள் போன்ற அறநெறிக் கோவை உலகத்தில் எங்கும் இல்லை" என்று பாராட்டுகிறார் என எடுத்தியம்பிய அம்மையார் விஜயலட்சுமி அவர்களுக்கு நமது வாழ்த்துக்கள்.

"சிறுவர்களே நாட்டின் வளரும் செல்வங்கள், வாடாத பொன் மலர்கள்" என்ற வரி எனது மனதில் அப்படியே பசுமரத்தாணி போல் பதிந்து விட்டது...

இந்த வரி மருத்துவ மாமணி தாரா நடராசன் அவர்கள் 21.11.2019 தின செய்தி நாளிதழில் எழுதிய கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது.

சிறுவர்கள் அதாவது குழந்தைகள் நமது நாட்டின் பெருஞ் செல்வங்கள்...

"குழந்தைகளே நமது வாழ்க்கையின் வெளிச்சங்கள்" என்று "சுட்டிப் பூங்கா" என்ற எனது ஹைக்கூ கவிதை நூலில் நான் எழுதியிருக்கிறேன்.

மருத்துவமாமணி அம்மையார் தனது கட்டுரையில் சிறுவர்களைப் பற்றி விரிவாக பதிவு செய்திருப்பதை நான் வெகுவாக ரசித்து, படித்து பாராட்டுகிறேன்.

தி.வே.விஜயலட்சுமி அவர்கள் ஐயா ஔவை நடராசன் அவர்களுக்கு தந்திருக்கின்ற புகழ் வணக்கம் நெகழ்ச்சியைத் தருகிறது.

தகுதியான அறிஞருக்கு தரமான கட்டுரையை அம்மையார் வழங்கி இருக்கிறார்.

நன்றி.

கவிஞர் பேரா, திருநெல்வேலி.

தலைவர்,

பொதிகைத் தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி.



02.08.23 உலகத் தமிழ் – 191 திருக்கோயிலும் குளமும் வண்ணப்படம் முகப்பில் மிளிர்கிறது.
கொள்கை விளக்கக் குறிப்பில் தமிழ்க் கவிஞர் நாள் விழா, தமிழ்நாடு நாள் விழாச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.தமிழ்நாடு நாளையொட்டி பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்படுவது மாணவப் பருவத்திலேயே தமிழார்வம் கொள்ளச் செய்யும் நன் முயற்சியாகும்.
'யமுனையின் சீற்றம்' கட்டுரை வழி, பெருமழையால் டெல்லி மக்கள் படுந்துயர், விவசாயத்தின் எதிர்காலம் குறித்த அச்சம் இரண்டும் நம் மனதை வாட்டுகின்றன.
முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு ஆட்சி மொழிக் கருத்தரங்கில்,கிரேக்கக் காப்பியங்கள் தமிழ் மொழி பெயர்ப்பு நூல் வெளியிட்டது சிறப்பு.கலைஞர் அவர்களுக்கு இது மிகச் சிறந்த அஞ்சலி.
தேன்துளி 1 – சங்க இலக்கியங்களில் தேன் எனும் சொல் இடம் பெறுவதைப் படித்து தேனெனச் சுவைத்தேன்.
தேன்துளி 2 – வணிகப் பெயர்கள் வண்டமிழ் மொழியில் அமைவதே உவகை. நம் தமிழ்நாட்டில் இதனை வலியுறுத்த வேண்டியுள்ளதை எண்ணி வருத்தம்.
செந்தமிழ்த்திலகம் திரு.செல்லத்தம்பி சீறிக்கந்தராசா வாசகர்களுக்குப் பத்து நிமிடத் தேர்வு வழங்கியது புதுமை.நல்ல பயிற்சி. நானும் அதை முயன்று பார்க்கிறேன்.
பெரும்பேராசிரியர் செ.இரா.செல்வகுமார் அவர்கள் திரைப்பாடல்களில் சொற்பிழை,பொருட்பிழை கூடாது எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.
பல திரைப்படப் பாடல்களில் திருவாசகம், திருக்குறள், பாரதியார் கவிதை வரிகளைக் கொச்சைப்படுத்தும் விதமாக அமைந்திருக்கும் அவலம் அறிந்து நாம் என்ன செய்வது?.
உலகு தழுவிய பொது நோக்கு நூல் திருக்குறள் என்பதைப் புலவர் தி.வே.விஜயலட்சுமி அவர்கள் அழகுற எடுத்துக் காட்டியுள்ளார்.இன்று இணையத்தால் உலகம் ஒன்றிணைந்து விட்டது.அறத்தால், அறிவால்,அன்பால்,பண்பால் உலகம் ஒரு குடும்பமாக இணைவது எந்நாளோ?
மருத்துவ மாமணி தாரா நடராசன் அவர்களின் "சின்னஞ்சிறார்களைக் காப்போம்" கட்டுரையில் சிறுவர்களின் சுகாதாரத்தைப் பேணிக் காப்பது நம் கடமை என வலியுறுத்துகிறார்.மிக அவசியமான சமூகக் கடமை அது.
"அருளுள்ளம் வாய்ந்த அழகுதமிழ்ச் சொல் வேந்தர்" இந்த இதழ்க் கட்டுரை அவ்வை நடராசன் அவர்களின் பெரும் பண்பையும் அன்பையும் மேலும் உணர்த்துகிறது.
' பூ மழை ' பகுதியில் கவிஞர் திரு.பே. ரா அவர்கள் உலகத்தமிழ்க் கட்டுரையாளர்களை வாரந்தோறும் பாராட்டி வருகிறார்கள்.நன்றி.
மாங்குடி மருதனார் நினைவுத் தூணில், திருநெல்வேலி பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பில் மலர் தூவி மரியாதை செய்தது அறிந்து மகிழ்ச்சி.





வாகீச கலாநிதி கி.வா.ஜ.



## தாயின் பிரார்த்தனை

இல்லற வாழ்க்கையில் ஈடுபட்ட அவன் மனித இயல்புடையவன் தானே ? மனிதர்களுக்குள்ள குறை பாடுகளும் அவனுக்கு உண்டு. கட்டிளங்காளை; செல்வத்தாலும் பிற பொருள்களாலும் குறைவற்றவன். எல்லாவற்றுக்கும் மேலாக அவனுக்கு அன்பே உருவாகிய காதலி கிடைத்திருக்கிறாள். வேறு என்ன வேண்டும் ?

இவ்வளவு வளம் இருந்தும், நித்தம் பாலுணவை உண்பவன் ஒருவன் இடையிலே சிறிது தயிர் உணவை விரும்பினது போலாயிற்று அச் செயல். அவனுக்கு ஒரு கூட்டாளி வேறு சேர்ந்துகொண்டான். பாட்டினாலே அவனை மயக்கிய பாணன் மெல்ல மெல்ல அவனுடைய உள்ளத்தைக் கவர்ந்தான். " வீணையின் இன் னிசையிலே உருகி நிற்கும் உங்கள் சுவையுணர் திறனை நான் போற்றுகிறேன். உயிரில்லாத இந்த யாழின் இசையே இவ்வளவு இனிமையாயின், இன்னும் உயிர்பெற்ற யாழின் இசை எப்படி இருக்கவேண்டும் ! என்று பாணன் ஒரு புதிய செய்தியை எடுத்துவிட்டான்.

அது என்ன ? உயிருள்ள யாழா ? அப்படியும் ஒன்று உண்டா ? "

ஆம்; உண்டு. கடவுள் படைத்த அந்த யாழ் கண்ணைக் கவரும்; காதைக் கவரும்; கருத்தையும் கவரும். அதன் பேரழகைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். அதன் இசையைக் கேட்கத் தொடங்கினால் பிறகு அதனினின்றும் மீள்வதென்பது தேவர்க்கும் அரிய செயல். இசையோடு போகுமா ? அது பாடும்; ஆடும்; ஐம்புலன்களுக்கும் இன்பம் தரும்.''

பாணனுடைய வருணனை இல்லத் தலைவனுடைய ஆர்வத் தீயை விறகிட்டும் நெய்விட்டும் மூட்டியது. மெல்ல மெல்லப் பாணன் தலைவனைப் பரத்தையர் சேரிக்கு அழைத்துச் சென்றாள். முதலில் இசை நயம் காமுற்றுத்தான் சென்றான் அவ்வாடவன்; ஒரு பரத்தையின் இசையிலே ஈடுபட்டான். அப்பால் அவளுடைய ஆடல் அவனை ஆட்கொண்டது. இறுதியில் அவளுடைய அழகைக் கண்டு மயங்கினான், படிப்படியாகத் தலைவன் தன் மனவலியை இழந்தான். அவன் தன் வீட்டிலே இருந்தால் தன் நிறையை இழந்திருக்க மாட்டான், பாணன் இசை ஆவலை அவன்பால் எழுப்பிப் பரத்தையர் சேரிக்கே அவனை அழைத்துச் சென்றுவிட்டான். அதற்குமேல் அவனுடைய சாமர்த்தியம் பலிக்கத் தொடங்கியது. இசையும் கூத்தும் அழகும் பேச்சும் மனவலி படைத்த தலைவனைக் காமச் சுழலுக்குள் இழுத்துச் சென்று ஆழ்த்திவிட்டன.

### கணவன்

இங்கே மனைத் தலைவி எப்போதும் போல் இல்லற ஒழுக்கங்களை முறைப்படி செய்து வந்தான். பரத்தையர் வலையிலே சிக்கினானென்பது அவளுக்குத் தெரியும், கற்புக்கு அருங்கலமாகிய அவள் அதனால் சிறிதும் மன வேறுபாடு அடையவில்லை. அவனிடத்தில் வைத்த காதல் தளரவில்லை ; அது பின்னும் இறுகியது. நமக்கெனவே வாய்த்தவனாகிய அவன் எங்கே சென்றலும் இங்கே வருவான் என்ற மனத் துணிவோடு அவள் இருந்தாள். அந்தத் துணிவு இல்லா விட்டால் அவள் ஒரு கணம் அமைதியாக வீட்டுக் கடமைகளைச் செய்ய முடியுமா ? கணவனும் மனைவியும் ஒன்றுபட்டு நடத்தும் இல்லற வாழ்க்கையில் புறத்தே சென்று வேளாண்மையோ, கைத்தொழிலோ, வியாபாரமோ ஏதாயினும் செய்து பொருள் வேண்டியவன் கணவன். அறவழியில் அவன் ஈட்டிக் கொணர்ந்த அதனைப்பாதுகாத்து அளவறிந்து, தகுதியறிந்து, வாழ்க்கை நிலையறிந்து செலவிட்டு அறத்தையும் இன்பத்தையும் வளர்ப்பவள் மனைவி. அவள் மலையரசி.

*வளரும் . . . .*





35



# புகழ் வணக்கம்

## அருளுள்ளம் வாய்ந்த அழகுதமிழ்ச் சொல்வேந்தர்



– தி. வே. விஜயலட்சுமி

நான் ஒவ்வொரு முறை செல்லும்போதும் திருக்குளற் தொடர்பான கட்டுரை எழுதிச் செல்வேன். உடனே படித்துக் காட்டச் சொல்லி பெருமகிழ்வு அடைவார். ஒவ்வொரு கட்டுரைக்கும் ற்ற தலைப்பை அவர்தான் வழங்குவார். “இயபுடைய மூவர்,” “நிலையாமையும், நிலைத்தலும், பாம்பொடு பழகேல்” இவை போன்ற கட்டுரைகளில் யான் தெரிவித்துள்ள புதிய ஆய்வு முடிவுகளை மனமாறப் பாராட்டுவார். “அம்மா எனக்கு இந்நாள் வரை தோன்றாத கருத்துகள் தங்கட்கு எப்படித் தோன்றின? என்று வியப்பார். மனந்திறந்து மற்றவரைப் பாராட்டுவதில் அவர்க்கு இணை அவரே.

திருக்குறளுக்கு ஒரு வரி எரை எழுதத் தொடங்கினேன். நான் எழுதிய உரையை 1330 குறட்பாக்களையும், எழுத்துக்கு எழுத்து அலசி, பரிமேலழகர், கா.சு. பிள்ளை போன்றவர்கள் உரைநுட்பத்துடன் ஆராய்ந்து பார்ப்பார். அவர் ஒப்புக் கொண்ட பிறகதான் நான் எழுதி முடிப்பேன். நான் எபதிய கட்டுரைத் தொகுப்பு நூலுக்கு அவர் இட்ட பெயர் “திருக்குறள் அலைகள்”. அவர் வழங்கிய அணைந்துரைக்குத் தலைப்பு “அலைகளுக்கு அப்பால்”. அணிந்துரையைப் படித்தாலே நூலை முழுமையாகப் படித்த உணர்வே யாவர்க்கும் எரும். “ஒரு வரியுள் வள்ளுவம்” என்ற நூலையும், அவரே வள்ளுவர் கோட்டத்தில் தலைமையேற்று வெளியிட்டார். என்னை எழுதுமாறு செய்யும் ஓர் உந்து சக்தியாக, தூண்டு கோலாகத் திகழ்ந்தார் எனில் மிகையில்லை. அதனாலன்றோ நான் தொடர்ந்து 5 நூல்கள் வெளியிட இயன்றது.

### தனிச் சிறப்பு

முனைவர் ஔவை அவர்கள் உரையாடும்போது நம்மிடம் வினாக்கட்கு மேல் வினாக்கள் தொடுத்து, நம் அடிமனத்தில புதைந்துள்ள அழகு தமிழிலக்கியப் புலமையை வெளிக்கொண்டு வரும் திறமை அவர்தம் தனிச்சிறப்பு நம் உளத்தில் எபந்த சிந்தனையோட்டத்தைக் கேட்டால் கதிரவனைக் கண்ட தாமரைபோல அவர் முகம் மலரும். ஔவை அவர்கள் தீந்தமிழ் ஆய்வைக் கேட்ட அளவில் நம் கவலைகள் அனைத்தும் விலகுவதுபோல இருக்கும். அவரைச் சந்திக்கவரும் பேரறிஞர்களிடம் என்னை அறிமுகம் செய்து வைக்கம் முறை அற்புதமாக இருக்கும். தம்மைக் காண வருபவர்களிடம் தம் உடல் நலனைப் பார்க்காமல் மணிக்கணக்கில் பேசி அவர்கட்கு காபி, டீ என்று உபசரித்து கொடுப்பதையும் வியந்து பார்ப்பேன். ஔவை அவர்களின் பரிந்துரைக் கடிதங்களால் பயன் அடைந்தவர்கள் பற்பலர். எந்த உதவியையும் மறுக்காமல் செய்து வாழ்த்தி அனுப்புவார். **கைம்மாறு கருதாத கடப்பாட்டினர்.**

### நூலார்வம்

ஔவை அவர்கள் அமர்ந்துள்ள இடங்களைச் சுற்றிப் பல துறை நூல்கள் சிதறிக் கிடக்கும். படித்துக் கொண்டும் முக்கிய குறிப்புகளை அடிக்கோடிட்டும் வைத்திருப்பார். அவர் நினைவாற்றலுக்கு ஒப்பாக ஒருவர் இருப்பாரா? என்றால் இல்லை என்பதே மெய். இந்த நூலில் இந்தப் பகுதியில் நாம் தேடும் கருத்துகள் இருக்கும் என்பதைச் சொல்லிவிடுவார். நூலகத்தில் எந்த வரிசையில் குறிப்பிட்ட நூல் இருக்கும் என்பது அத்துப்படி.

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . .*







# புகழ் வணக்கம்

அருளுள்ளம் வாய்ந்த அழகுதமிழ்ச் சொல்வேந்தர் . . .

## வாழ்க்கைத் துணைவியார்—டாக்டர் தாரா நடராசன்

அவருக்கு இணையாக என்னிடம் பாசமும், நேசமும் வைத்திருப்பவர். அவரின் வாழ்க்கைத் துணைவியார் டாக்டர் தார நடராசன் அம்மா அவர்களைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். எங்கள் இல்லத்திற்கு ஔவை அவர்களைப் போலவே பல முறைகள் வந்து உரையாடுதல் வழககம். தேர்ந்த மருத்துவராயிருப்பதால் தன் துவைர் உடல் நலனில் கவனம் கொண்டு மருத்துவ ஆலோசனைகள் வழஙகி கண்ணிமை போல் கவனித்துக் கொள்வதைக் கண்டால் நான் மகிழ்வேன். ஒரு மனைவி எந்த நிலையிலும், எந்த வயதிலும் கணவன் உடல்நிலையில் இத்துணை அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கு அவர் ஒரு சான்று. “இல்லது என இல்லவன் மாண்பானால்? என்ற குறட்பாவிற்கு எடுத்துக்காட்டு. அம்மா அவர்கள் பரதக்கலை, வில்லுப்பாட்டு மற்றும் தமிழிசை, கருநாடக இசையில் பேரார்வம் கொண்டவர். வீணையிசையில் மிக விருப்பம். அண்ணா நகரில் இருந்து திருவல்லிக்கேணிக்கு மாதம் இருமுறை வந்து என்னிடம் வீணை கற்றுக்கொள்வார். ஒரு பாடல் நன்றாக மனதில் பதியும் வரை வாசிதது்க் கொண்டிருப்பார். அவர் கற்றுக்கொள்ளும்போது அவர் முக மலர்ச்சியில் கலைமகளின் அருள் கனிந்து இருப்பதைக் காணலாம். ஒரிரு ஆண்டுகள் வந்து சென்றார். பின் எலும்பு முறிவு சிகிச்சை எடுத்துக் கொண்ட விறகு வரவியலவில்லை. ஆனால் இப்போதும் அண்ணா நகர் இல்லத்திற்கு நான் சென்றால் வீணையை எடுத்து வாசித்துப் பார்ப்பார். இசைக்கு வயது தடையில்லை. ஆர்வம் இருப்னி எந்த வயதும் அமையும் என்பதற்கு அவர் ஒரு காட்டு. என்னை ஊக்குவிப்பதில் அவர் சளைக்க மாட்டார்.

## ஔவை அவர்கள்அளப்பரிய தமிழ் வேணவா

ஒரு கருத்துத் தனக்கு நன்கு தெரிந்திருந்தாலும் நம் கருத்து எப்படியென்பதை அவர் கேட்கும் முறையைப் பார்த்தால் தான் ஒருவர் உணர முடியும். ஔவை அவர்களுடன் உரையாடும்போது எனக்கு உளத்தில் ஓர் அச்சவுணர்வு இருக்கும். ஒரே தலைப்பை எடுத்துகொண்டு பல பேர் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெறுகிறார்கள். சான்றாக, குறுந்தொகை ஆராய்ச்சி இந்நாள்வரை பலரும் செய்துள்ளனர். ஆய்வில் புதுமை வேண்டுமல்லவா? கூறியதையே திரும்பக் கூறலாமா? இதுபற்றி திருவள்ளுவம் ஏதேனும் சொல்லியுள்ளாரா! என்று ஒரு நாள், என்னைப் பார்த்துக் கேட்டார். நான் உடன் விடையுறுத்தேன். “இருக்கிறது ஐயா! பயனில சொல்லாமை” என்ற அதிகாரம் கூறுகிறதே, ‘யாருக்கும் பயனற்றவற்றைப் பலகாலும் சொல்பவன் மகன் அல்லன்’ என்கிறார் திருவள்ளுவர் (பயனில் சொல் பாராட்டுவானை) என்றேன். பலே! பலே! என்றார். ஔவையவர்களிடம் இது போன்ற பாராட்டுக்கள் பெறும்போது பத்மஸ்ரீ பட்டம் பெறுவது போன்ற உணர்வே எனக்கு ஏற்படும். இதை விளக்கமாக எழுதி, இலக்கியப் பீடத்தில் விக்கரமன் அவர்களிடம் கொடுத்துப் போடச் சொல்லுமாறு பணித்தார். இச்செய்தி இதழில் வெளியானது. நல்ல வரவேற்பு கிடைத்தது.

## திருக்குறள் ஆய்வு

உலகப் பொதுமறையான திருக்குறளுக்கு ஒரே வரியில் பொருள் மாறாமல் யான் உரையெழுதத் தொடங்கிய காலம் பொற்காலம். ஒவ்வொரு அதிகாரத்தையும் அலசி பல உரையாசிரியர்கள் உரைகளைக் கொண்டு உரையெழுதச் சொல்வார். ஒவ்வொரு திருக்குறளுக்கும் உரை எழுதியவுடன்

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . .*







# புகழ் வணக்கம்

அருளுள்ளம் வாய்ந்த அழகுதமிழ்ச் சொல்வேந்தர் . . .

அறிஞர் ஔவை அவர்களிடம் படித்துக் காட்டுவேன். அவர் முகத்தில் நிறைவு வந்தால்தான் தொடர்வேன். அதுபோழ்து தலைமைச்செயலக மொழி பெயர்ப்பாளர் திரு. இராஜகோபாலன் (இராஜாஜி) அவர்களும் தன் கருத்தைச் சொல்வார். உவப்பத்தலைக் கூடி, உள்ளப் பிரிதல் போல் அவ்விடம் கலகலப்பாக இருக்கும். ஒரு வரியில் உரை காணலில் அவர்க்கு ஈடுபாடு இல்லையெனினும் ஒப்புக் கொண்டார். அறத்துப்பால், பொருட்பால் இரண்டிற்கும் உரையமுதும்போது அவர் கருத்துரையை நினைவிற் கொண்டு எழுதுவேன். உரைப்பணி மிகச் சிறப்பாக முடிந்தது. “ஒரு வரியில் வள்ளும்” என்ற நூல் இன்று பலராலும் பாராட்டப் பெறுகிறது.

## திருக்குறளில் புகழ் — அதிகாரம்

“நத்தம் போல் கேடும் உளதாகும்” உன்று தொடங்கும் குறட்பாவிற்கு அணுக்கவுரை எழுதிப் படித்துக் காட்டினேன். உரை நயம் கண்டு உவகை கொண்டார். இக்குறட்பா எந்த அதிகாரம்? என்றார். “புகழ்” என்று கூறியவுடன், “சரி, நான் என் கருத்தைச் சொல்கிறேன். இதையும் தக்க இடத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்” என்பார். பின்னர் கண்களை மூடிக் கொண்டு சொல்லத் தொடங்கினால் கடல் மடையென, கருத்தோட்டம் பெருக்கெடுக்கும். புகழை எப்படிப் பெறுவது? எதனால் பெறுவது? எவ்வாறு காப்பது? என்று அடுக்கடுக்காய் வினாக்கள் எழுப்புவார். பல்லாற்றான் சான்றுகளுடன் ஆராய்ந்து பல அறிஞர்களின் உரையைக் கண்டபின், இப்போது எழுதி முடித்து எடுத்து வரவுமெனப் பணிப்பார். இன்றைய நாள் எம் உள்ளத்தில் உரமூட்டிய ஊக்க மருந்து என எண்ணி எழுதுவேன்.

## திருக்குறளில் கல்வி/உண்மையறிவு

இவ்வதிகாரக் குறட்பாக்கட்கு உரையமுதத் தொடங்குமுன் அச்சொல்லை ஆய்வுக்கு உட்படுத்துவார். கற்றல் என்பதற்குக் கேட்டல், அறிதல், உணர்தல், காண்டல் என்ற சொற்களையும் பொருளாகக் கொள்ளவேண்டும். “மெய்ப் பொருள் கண்டார் தலைப்படுவார்” என்ற தொடர் மெய்ப் பொருளைக் காண முடியாது. கேட்க முடியும், உணர முடியும். “தொட்டனைத் தூறும் மணற்கேணி” என்ற தொடரில் நாம் எந்த அளவுக்கு ஆழமாகத் தோண்டுகிறோமோ அந்த அளவிற்குக் கேணியில் நீர் ஊறும். அவ்வாறே ஒரு பொருளில் தோயத் தோயக் கருத்துகள் எழும்பும். இவற்றைப் பயிற்சியால், முயற்சியால், ஊக்கத்தால், உழைப்பால் வளர்த்துக்கொள்ள வேண்டும். “ஆழத் தோண்டினாலும், நன்னீர் தான் சுரக்குமா? உப்பு நீர் சுரக்குமா? என்ற வினா வந்தால் விடை கூற முடியாது” என்று விளக்க ஆரம்பித்து அதை மற்றொரு குறளொடு ஒப்பிடும் திறன் ஔவை அவர்கள் ஒருவரால் தான் இயலும். கற்றனைத் தூறும் அறிவு என்பதில் அறிவு என்ற சொல்லுக்கு உள்ள அறிவு என்பதுதான் பொருள். ஒருவன் எந்தத் துறையில் வல்லவனகா இருக்கிறானோ அந்தத் துறையின் அறிவுதான் உண்மையறிவு. ஒருவன் பல நூல்களைக் கற்றாலும், அவனுக்கு இயல்பாக உள்ள அறிவுத் திண்மைதான் உண்மை என்று முடிப்பார்.

> **“நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்**
> **உண்மை யறிவே மிகும்”**

என்ற குறளில் வரும் உண்மையறிவை விளக்கத் தொடங்குவார். நான் வியந்தவாறு செவிமடுப்பேன். “அதற்குச் சான்றாக யாரைக் கூறலாம் ஐயா? என்று கேட்பேன். சான்றாக டாக்டர் வ.செ. குழந்தைசாமி

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . .*







# புகழ் வணக்கம்

அருளுள்ளம் வாய்ந்த அழகுதமிழ்ச் சொல்வேந்தர் . . .

அவர்கள் ஒரு பெரிய பொறியாளர். இருப்பினும் பொறியியல் துறையின் நுணுக்கத்தை நாம் அவரிடம் அறிய முடியாது. அவர் வாய் திறந்து பேசினால், தாய்மொழிக் கல்வி, அறிவியல் தமிழ் பற்றித் தான் பேசுவார். எனக்கு இங்கு உண்மையறிவு அவர் மிகவும் விரும்புகிற தாய்மொழியின் பால் உள்ள புலமையே'' என்று முடித்து விடுவார். இப்படிக் கூடச் சிந்திக்க முடியுமா? என்றால் ஔவை அவர்களால் மட்டுமே முடியும். ஊழ்வினை அதிகாரத்தில் வரும் குறளாயிற்றே! ஊழால் ஒருவன்பெறும் அறிவுதானே உண்மையறிவு? என்று கேட்பேன். அவ்வாறு முழுமையாகக் கொள்ள முடியாது. பரிமேலழகர் உண்மையறிவுக்கு தரும் பொருள் என்னவெனில், (ஊழால்) உள்ளதாம் நன்மை என்றும், பரிப்பெருமாள் இயல்பான அறிவு, முனைவழி அறிவு என்ற பொருள்களைக் குறிப்பிட்டாலும், நாம் புதுமையாகப் பொருள் கொள்வோமே என்பார். சான்றாதாரங்கள் காட்டிச் சிந்திப்பார்.

இவ்வாறு அவரை என் பேராசானகாவும், நான் மாணவியாகவும் நினைத்துக் கொண்டு செவிமடுத்த கருத்துக்கள் பற்பல. அவ்வாறே திறனறி காட்சியிர் தெளிந்தனம் ஆதலின் என்ற புறத் தொடரில், காட்சி என்ற தொடர் வரும் இடங்களைச் சொல்லுங்கள். பின்னர் அத்தொடரை ஆராய வேண்டுமென்பார் ஔவையவர்கள். மாசறு காட்சி, கடனறி காட்சி, நடுக்கற்ற காட்சி, செயிர்தீர் காட்சி, ஆசறு காட்சி என்று நான் சொல்லச்சொல்ல, பேஷ், பேஷ் கிடைக்கும். அவையெல்லாம் அவரிடம் நான் பெற்ற உயர்ந்த விருதுகளாக நினைத்து மகிழ்வேன்.

## என் கனவு / விருப்பம்

**முனைவர் ஔவை அவர்களுடன் உரையாடிப் பார்த்தால், மேடைகளில் அவர் உரைகளைக் கேட்டால், அவ்வுரை நம் நெஞ்சை அசை போட வைக்கும். ஒரு சிந்தனை ஒளியை நம் செவிகளில் அவர் பாய்ச்சுவார். சிந்தனை வெளிப்பாடுகள் நூலாக்கம் பெற்றால் நாளை உலகம் அவர்தம் மேதகு ஆளுமையைப் புரிந்து கொள்ளுமே.**

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம் நீண்ட சிந்தனைகளைத் தம் படைப்புகளில் பதிவு செய்து போந்ததால் அன்றோ இன்று வள்ளுவரும், கம்பனும், பாரதியும் பல ஆண்டுகளைக் கடந்தும் நம் நெஞ்சில் வாழ்கின்றனர். கட்டுப்பாடுகள் ஒன்றும் இல்லாது, அவரைத் திருக்குறள் 1330க்கும் அல்லது 133 குறட்பாக்களுக்காவது சிந்தனையுரை சொல்ல, நூல் வடிவில் கொண்டுவர பேராவல் கொண்டேன். ஏனென்றால், ஒரு குறளுக்கு அவர் காணும் பொருள் புதிய கோணத்தில் இருக்கும். ஆய்வாளர்கட்கு உறுதுணையாக இருக்கும்.

அவரிடம் நான் அடிக்கடி "தாங்கள் சொல்லுங்கள். நான் பதிவு செய்கிறேன்.'' என்று சொல்வேன் ஒரு நாள் அவர் மகிழ்ச்சியோடு கடவுள் வாழ்த்து அதிகாரம் தொடங்கினார். முதல் குறளுக்குப் பொருள் கூறி முடிக்க ஒரு மணி நேரம் ஆயிற்று. இவ்வாறு 10 குறட்பாக்கட்குச் சொல்லியிருப்பார். இடையில் அவர் உடல்நலம் மிகவும் குன்றி விட்டது. தொடர இயலவில்லை. தி.நகர் திலக் தெருவில் நடந்த நிகழ்வு இது. அவர் திருமகனார் முனைவர் ஔவை அருள் அவர்கள் தலைமைச் செயலக மொழி பெயர்ப்புத் துறை இயக்குநராக மிளிர்கிறார். அவர் இப்பணியைத் தம் தந்தையாரின் அருகிலிருந்து 133 குறட்பாக்களுக்கு நல்லுரையைப் பெற்றுத் தமிழுலகுக்குத் தருவார் என்ற நம்பிக்கை உள்ளது.

*தொடரும் . . . . .*

# தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக
# 2022–2023ஆம் ஆண்டு நடத்தப்பெற்ற
# ஆட்சிமொழிச் சட்ட வாரம் — இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம்மாவட்டஆட்சியர் திரு ஜானிடாம்வர்கீஸ் இ.ஆ.ப., அவர்களின்
தலைமையில்ஆட்சிமொழிச்சட்டவாரம் (01.03.2023 – 08.03.2023)

**முதல்நாள் –**





விழிப்புணர்வுப்பேரணி

**2– ஆம்நாள்**



கணினித் தமிழ்ப் பயிற்சி

**3–ஆம்நாள் –**



மொழிப் பயிற்சி

**4–ஆம்நாள்**



ஆட்சிமொழிச் சட்டம், அரசாணைகள் குறித்து விளக்கவுரை

**5–ஆம்நாள்**



வணிகநிறுவனக் கூட்டம்

**6– ஆம்நாள் –**



பட்டி மன்றம்

**7– ஆம்நாள்**



ஆட்சிமொழித் திட்ட விளக்கக் கூட்டம்

## தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக 2022–2023ஆம் ஆண்டு நடத்தப்பெற்ற ஆட்சிமொழிச் சட்ட வாரம் — திருச்சிராப்பள்ளி மாவட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் திரு மா. பிரதீப் குமார் இ.ஆ.ப., அவர்களின் தலைமையில்ஆட்சிமொழிச்சட்டவாரம் (21.02.2023 – 28.02.2023)

முதல்நாள் 21.02.2023



விழிப்புணர்வுப் பேரணி

இரண்டாம் நாள் 22.02.2023



கணினித் தமிழ், கணினிப் பயன்பாடு
திரு. எட்வர்டு பாக்யராஜ்

3 – ஆம் நாள் – 23.02.2023



மொழிப்பயிற்சி கலைச்சொல்லாக்கம்
முனைவர் ப. வேங்கடேசன்

4 – ஆம் நாள் – 24.02.2023



ஆட்சிமொழிச் சட்டம், அரசாணைகள் குறித்து
விளக்கவுரை முனைவர் க. சிவசாமி

5– ஆம் நாள் – 25.02.2023



வணிக நிறுவனங்களுடன் கலந்தாய்வுக் கூட்டம்

6 – ஆம் நாள் – 27.02.2023



ஆட்சிமொழி விழிப்புணர்வுப் பட்டிமன்றம்

7 – ஆம் நாள் – 28.02.2023



திருச்சிராப்பள்ளி மாவட்டம் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் –
ஆட்சி மொழித் திட்ட விளக்கக் கூட்டம்